# வரலாறும் சமூகக் கல்வியும்

## ஆண்டு 11

### துரித மீட்டலுக்கான

### வினா விடை

* * *

க. சந்திரசேகரம்

யா / நாவற்குழி மகா வித்தியாலயம்

கைதடி

விலை ரூபா



No.
Date:

# வரலாறும் சமூகக் கல்வியும்

Shanmugalingam Thevaky
B Block, No 2/7
month - 6
year - 1992

## ஆண்டு 11

துரித மீட்டலுக்கான

வினா விடை

அன்பளிப்பு
க. சண்முகலிங்கம்
சித்தேஸ்வரராசம்
கைதடி

திரு. க சண்முகலிங்கம்
திகதி 15.04.06

க. சந்திரசேகரம்
யா / நாவற்குழி மகா வித்தியாலயம்
கைதடி

Pam 1325

முதற்பதிப்பு!- ஆவணி 1991

பதிப்புரிமை

# நுழைவாயில்..........

- இவ் வினாவிடைப் புத்தகம் ஆண்டு 11 மாணவர்களுடைய பாடத் திட்டத்தை தழுவி ஆக்கப்பட்டுள்ளது.

- இவ்வினாவிடைப் புத்தகத்தில் பகுதி I சமூகக்கல்வி வினாவிடைகளாகவும், பகுதி 2 வரலாறு வினாவிடைகளாகவும் அமைந்துள்ளது.

- இலகுவான முறையில் மாணவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வினாவும் விடையுமாக ஆக்கப்பட்டுள்ளது.

- இவ் வினாவிடைப் புத்தகத்தை சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட உதவிய ஆசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- வினாவிடைப் புத்தகத்தில் பிழைகள், திருத்தங்கள் இருப்பின் கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு இவ்வாறான ஆக்கப்பணிகளை செய்ய ஊக்கமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆண்டு 9, ஆண்டு 10 வினாவிடைப் புத்தகங்களுக்கு ஆதரவு நல்கிய ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

யா / நாவற்குழி மகா வித்தியாலயம்,
கைதடி.

க. சந்திரசேகரம்

# பகுதி I

# சமூகக் கல்வி

## 1. வளங்கள்

1. வளங்கள் என்றால் என்ன?
   மனித தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படும் பொருள்கள்

2. மனித முயற்சியின்றி இலவசமாக கிடைக்கும் வளங்கள் எவை?
   சூரிய ஒளி, வளி

3. மனித முயற்சியால் கிடைக்கும் சில வளங்கள் கூறுக?
   கனிப்பொருளெண்ணெய், இரும்பு

4. வளங்களை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம்?
   1. பௌதிக வளம் (இயற்கை)
   2. மனிதவளம்

5 வளங்களில் மிகமுக்கியமானது எது?
   மனிதவளம்

6. பௌதிகச் சூழலில் அடங்கும் மூன்று பிரிவுகளுமெவை?
   நிலம், நீர், வளி

7. நிலத்தினுள் அடங்குவன எவை?
   கனிமங்கள், தாதுக்கள், தாவரங்கள், வனவிலங்குகள்

8. நீரில் அடங்குவன எவை?
   மேற்பரப்புநீர், பூமிக்கு அடியில் உள்ள நீர், நீரில் வாழும் உயிரினங்கள் கனிப்பொருட் படிவுகள்

9 வளிக்கோளத்தில் அடங்குவன எவை?
   வளியும், சூரிய ஒளியும்

10. பௌதீக சூழலிற்கு எதிரான சூழல் எது?
கலாசார சூழல்

11. கலாசார சூழலை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?
தரைத்தோற்றத்தின் அமைப்பு
மனிதனுடைய நடத்தை
தொழில் நுட்ப வளர்ச்சி
காலநிலை

12. மனித வளங்களில் அடங்குவன எவை?
மனிதனும், மனிதனுக்குள்ள ஆற்றலும்

13. எப்படியான மனிதனை வளமென கொள்ளமுடியும்?
தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்யும் மனிதனை

14. உற்பத்தி திறனை வளர்ப்பதக்கு அவசியமானது எது?
பயிற்சி

15. பயிற்சியை எதன் மூலம் பெறலாம்?
கல்வி, நவீன தொழில் நுட்பம், தொழில் நுணுக்கமுறை
சமுதாயப் பழக்க வழக்கங்கள், உளப்பாங்கு என்பவற்றின் மூலம்.

16. ஒரு தொழிலிற்குரிய மூலதனங்கள் எவை?
பணம், இயந்திரசாதனங்கள், கருவிகள், கட்டிடங்கள்,
மூலப்பொருட்கள் என்பன,

17. பொருளாதார வளம் என்றால் என்ன?
ஏதாவது ஒரு வளத்துடன் மனிதக்காரணி சேருவதனால் ஏற்படுவது
பொருளாதாரவளம் எனப்படும்,

18. உலோகக் கனியங்கள் எவை?
இரும்பு, செம்பு, அலுமினியம், தங்கம், வெள்ளி.

19. உலோகமல்லாத கனியங்கள் எவை?
நிலக்கரி, கந்தகம், உப்பு.

20. மீளும் வளங்கள் எவை?
வெள்ளி, உப்பு, கந்தகம், சூரியசக்தி.





21. மீளா வளங்கள் எவை?
நிலக்கரி, இரும்புத்தாது, பெற்றோலியம் இயற்கைவாயு,

22. உயிர்ச்சுவட்டு கனிய வளங்கள் எவை?
நிலக்கரி, பெற்றோலியம்.

23. சக்தி மூல வளங்கள் எவை?
நிலக்கரி, பெற்றோலியம், இயற்கைவாயு, நீர்மின்வலு,

24. உலகச் சக்தி நுகர்வில் பெற்றோலியம் எத்தனை வீதமாகும்?
45 ./.

25. பெற்றோலியம் அதிகம் காணப்படும் நாடுகள் எவை?
மத்திய கிழக்கு நாடுகள்.

26. உலகச் சக்தி நுகர்வில் நிலக்கரி எத்தனை வீதமாகும்?
25 ./.

27. ஆசியாவில் நிலக்கரி கூடுதலாக காணப்படும் நாடு எது?
சோவியத் ரஷ்யா.

28. உலகச் சக்தி நுகர்வில் வாயு, சூரியசக்தி, அணுசக்தி, நீர்மின்வலு
எத்தனை வீதமாகும்?
30 ./.

29. உலகச் சக்தி நுகர்வு ஆண்டு தோறும் அதிகரிக்கும் வீதம் எவ்வளவு?
7 ./.

30. எரிபொருளுக்கு பதிலாக மனிதன் இப்போது எதில் கவனம்
செலுத்தியுள்ளான்?
நிலவெப்பம், அலைச்சக்தி ( உயரலை, தாழலை ) சூரியசக்தி
என்பவற்றில்

31. மனிதனுக்கு முக்கியமான இயற்கை வளங்களெவை?
நிலம், மண், இயற்கைத்தாவரம், வனவிலங்குகள்.

32. மத்திய கிழக்கு நாடுகள் அண்மைக் காலத்தில் அபிவிருத்தி
அடைந்தமைக்கான காரணம் என்ன?
அங்கு காணப்பட்ட கனிப்பொருளெண்ணெய்,

No
Date:

33. வட அமெரிக்காவில் உள்ள பஞ்சவாவிப் பிரதேசம் கைத்தொழில் பிரதேசமாக மாறியதற்கு காரணமாக இருந்தது எது?
அங்கு காணப்பட்ட கனிய வளங்கள்.

34. இயற்கைவளம் இல்லாதபோதும் யப்பான் கைத்தொழில் நாடாக விளங்க காரணம் என்ன?
அந்நாட்டின் மனித வள அபிவிருத்தி.

35. வளங்கள் தொடர்பாக உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள பொதுவான பிரச்சனை என்ன?
வளங்களின் பற்றாக்குறை.

36. வளங்களின் பொதுவான தன்மை என்ன?
மனித பயன்பாட்டிற்கு உட்பட்டன.

37. வளங்களின் அசம நிலை என்றால் என்ன?
இயற்கை வளங்கள் எல்லா நாடுகளிலும் ஒரேயளவில் காணப்படாமை.

## 2. பொருளாதார முறைகள்

1. பொருளாதார முறை என்றால் என்ன?
ஒரு நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு அந்நாட்டு வளங்களை பயன்படுத்த வகுக்கப்படும் ஒழுங்கு.

2. ஆதிகால மக்கள் எந்த முறையில் தங்கள் கொடுக்கல் வாங்கல்களை செய்து வந்தனர்?
பண்டமாற்று முறையில்.

3. பொருளாதார முறைக்கு முக்கிய அம்சங்களாக இருப்பது எவை?
பொருளுற்பத்தி, மனிதவுழைப்பு, பண்டமாற்றுமுறை, மூலதனம், இலாபம், வட்டி என்பன.

4. இன்றைய பொருளாதார முறைகள் எவை?
அ. முதலாளித்துவ பொருளாதார முறை.
ஆ. சமவுடமைப் பொருளாதார முறை
இ. கலப்பு பொருளாதார முறை





5. முதலாளித்துவ பொருளாதார முறை எத்தன்மையுடையது?
முக்கியமான முதலீடு தனியாருக்கு சொந்தமாக இருக்கும்.

6. முதலாளிமார்கள் எவ்விதமான பொருட்களில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்?
தமக்கு அதிக இலாபத்தை கொடுக்கக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதில்.

7. இலங்கையின் பொருளாதார முறை எது?
ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறை

8. எந்தப் பொருளாதார முறையிலும் முதலில் தீர்மானிக்க வேண்டிய விடையங்கள் எவை?
அ. உற்பத்தி செய்யவேண்டிய பொருள் எது
ஆ. எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும்
இ. உற்பத்தியின் அளவு.

9. எப்படிப்பட்ட பொருளுற்பத்திக்கு மூலதனம் அதிகம் தேவை?
கேள்வியும், விலையும் உயர்வாக உள்ள பொருட்களுக்கு

10. எப்படிப்பட்ட பொருளுற்பத்திக்கு மூலதனம் அதிகம் தேவையில்லை?
கேள்வியும், விலையும் குறைந்த பொருட்களுக்கு

11. இன்றைய நிலையில் எவ்வாறான பொருளாதார நடவடிக்கைக்கும் அவசியமானது எது?
மூலதனம், வலு, தொழில்நுட்ப அறிவு, இயற்கைவளம்

12. அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்களிலுள்ள சமூகப் பிரச்சனைகள் என்ன?
வருமானப் பரம்பலில் ஏற்படும் இடைவெளி அதிகமாயிருத்தல்

13. சமுதாயத் தேவைகளைக் கருத்திற் கொண்டு பொருளுற்பத்தி மேற்கொள்ளும் பொருளாதார முறை எது?
சமவுடமைப் பொருளாதார முறை

14. சமவுடமைப் பொருளாதாரத்தில் உற்பத்திச் சாதனங்கள் யாரின் பாற்பட்டதாக இருக்கும்?
அரசாங்கத்தின் பாற்பட்டதாக இருக்கும்.

No.
Date:

15. உற்பத்தியின் போது மக்களால் முன்வைக்கப்படும் யோசனைகள் கவனத்திற்கு எடுக்கப்படும் பொருளாதார முறை எது?
சமவுடமைப் பொருளாதார முறை.

16 அத்தியாவசிய பொருட்களான உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரசேவைகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொருளாதார முறை எது?
சமவுடமைப் பொருளாதார முறை.

17. முதலாளித்துவ பொருளாதார நாடுகள் சில கூறுக?
ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ்.

18. சமவுடமைப் பொருளாதார நாடுகள் சில கூறுக?
சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடியரசு கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லவேக்கியா, கியூபா.

19. கலப்பு பொருளாதார நாடுகள் சில கூறுக?
இலங்கை, இந்தியா, இந்தோனேசியா.

20. உற்பத்தியில் தனியார் ஈடுபடும் பொருட்டு ஊக்குவிக்கும் பொருளாதார முறை எது?
கலப்பு பொருளாதார முறை.

21. கலப்பு பொருளாதார முறை எந்த நாடுகளில் கூடுதலாக காணப்படும்?
அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில்.

22. அரசாங்கத்தின் தேவைக்கும், நாட்டின் தேவைக்கு மேற்ப வியாபார தாபனங்கள் நடாத்தும் பொருளாதார முறை எது?
கலப்பு பொருளாதார முறை.

23. கலப்பு பொருளாதார முறையின் முக்கிய அம்சம் எது?
உற்பத்தியின் தீர்மானங்களை அரசாங்கமும், தனியாரும் சேர்ந்து மேற்கொள்ளல்.

24. முதலாம் மண்டல நாடுகள் சில கூறுக?
ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ்.

25. இரண்டாம் மண்டல நாடுகள் சில கூறுக?
சீனா, சோவியத் ரஷ்யா கிழக்கு ஜேர்மனி.



26. மூன்றாம் மண்டல நாடுகள் சில கூறுக?
இலங்கை, இந்தியா, இந்தோனேசியா.

27. நான்காவது உலக நாடுகள் எனக் குறிப்பிடுவது எதை?
எண்ணெய் உற்பத்தி நாடுகளை

## 3. அபிவிருத்தி

1. அபிவிருத்தி என்றால் என்ன?
பொருளாதார வளர்ச்சியோடு சமூகம், கலாசாரம் போன்றவற்றின் நிறைவைக் குறிப்பதாகும்

2 அபிவிருத்தியின் பிரதான அம்சங்கள் எவை?
பொருளாதாரம், சமூகம், கலாசாரம்

3 ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடபயன்படுவது எது?
தலாநபர் மொத்த தேசிய வருமானம்

4. தனிநபர் மொத்த தேசிய வருமானத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?
தலா வருமானம் என

5. தலா வருமானம் எவ்வாறு கண்டறியப்படும்?
குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குரிய மொத்த தேசிய உற்பத்தியை அந்நாட்டு சனத்தொகையினால் பிரிப்பதன் மூலம்.

6 ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடப் பயன்படுவது எது?
நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி.

7. ஒரு வயது பூர்த்தியாக முன்னர் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வாறு அழைக்கப்படும்?
பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண் ( PQLI )

8. பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண்ணில் அடங்குவன எவை?
எழுத்தறிவு. ஆயுட்காலம். குழந்தைகளின் மரணவீதம் என்பன.

9. ஒரு நாட்டின் சிசு மரண எண்ணிக்கை குறையவும் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் அதிகரிக்கவும் அத்தியாவசியமானது எவை?
சுகாதார வசதிகள், போசணை மட்டம், சிறந்த வைத்தியவசதி, கல்வி வசதி.

10. மக்களின் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தின் ஒரு அம்சமாக கொள்ளப்படுவது எது?
அந்நாட்டு மக்களின் போசனை மட்டம் உயர்வாக இருத்தல்.

11. போசனை மட்டம் எதைக்கொண்டு மதிப்பிடப்படுகின்றது?
நாளாந்த உணவில் அடங்கும் கலோரி, புரதம் என்பவற்றின் அளவைக் கொண்டு.

12. அபிவிருத்தி என்ற சொல்லை உலகம் முழுவதும் ஏற்கச் செய்த தாபனம் எது?
ஐ. நா. தாபனம்.

13. உலக சனத்தொகையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படுவது எத்தனை வீதம்?
75 ./.

14 உலக மொத்த தேசிய உற்பத்தியில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவது எத்தனை வீதம்?
20 ./.

15 உலக சனத்தொகையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படுவது எத்தனை வீதம்?
24 ./.

16 உலக மொத்த தேசிய உற்பத்தியில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவது எத்தனை வீதம்?
80 ./.

17. அபிவிருத்திக்கு அத்தியாவசியமானது எது?
மூலதனம்.

18. அபிவிருத்திக்கு குறுக்கீடாக இருப்பது எது?
மூளை வெளியேற்றம் அல்லது புத்திஜீவிகள் வெளியேற்றம்.

19. அபிவிருத்தியின் 3- தசாப்தங்களும் எவை?
1960 – 1990 .

20 எதைக் கொண்டு ஒரு நாட்டின் சமூக அபிவிருத்தியை அளவிடலாம்?
1. பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண்,
2. போசாக்கான உணவு.
3. சனத்தொகை வளர்ச்சி;
4. சுகாதார மருத்துவ, கல்வி வசதிகள்,



21. தங்கியிருப்போர் தொகை எந்த நாடுகளில் கூடுதலாக இருக்கும்?
அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில்.

22. தங்கியிருப்போர் சனத்தொகையில் எத்தனை வீதமாகும்?
40- 45 ./.

23 இலங்கையில் இடம் பெறும் அபிவிருத்தி எதை மையமாகக் கொண்டுள்ளது?
நிலம், நீர், என்பவற்றை.

# 4. அபிவிருத்தி அடைந்த நாடுகளினதும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினதும் வரலாற்றுப் பின்னணி.

1. அபிவிருத்தி அடைந்த நாடுகள் சில கூறுக?
ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, சுவிற்சிலாந்து, யப்பான், நியூசிலாந்து, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, அவுஸ்திரேலியா.

2. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சில கூறுக?
இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, குவைத், பங்களாதேஷ், பாகிஸ்தான், எகிப்து, தாய்லாந்து, நைஜீரியா, உகண்டா.

3. மேற்கு ஐரோப்பிய நாடுகள் நாடுகாண் பயணத்தை மேற்கொள்ள காரணியாக இருந்தது எது?
15-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியாகும்.

4 மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமது குடியேற்ற நாடுகளிலிருந்து எந்தப் பொருட்களைப் பெற போட்டி போட்டன?
தங்கம், வெள்ளி, வாசனைப் பொருட்கள்.

5. குடியேற்றங்களை ஏற்படுத்திய மேற்கு நாடுகள் எது?
போர்த்துக்கல், ஸ்பெயின், ஒல்லாந்து, பிரித்தானியா, பிரான்ஸ், பெல்ஜியம்.

6. வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் கிடைத்த நிதியை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்திய நாடு எது?
பிரித்தானியா.

7. கைத்தொழிற் புரட்சி எப்போது ஏற்பட்டது?
18-ம் நூற்றாண்டில்.

8. கைத்தொழிற் புரட்சிக்கு அத்திவாரமாக அமைந்தது எது?
விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட இயந்திரக் கண்டுபிடிப்பு.

9. மேற்கு ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை ஏற்படுத்தியதன் காரணம் என்ன?
தமது தேவைக்கு ஏற்ப மூலப் பொருட்களைப் பெறவும், தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தவும்.

10. ஆரம்பத்தில் மேனாட்டு மூலதனம் மூலம் கைத்தொழில் அபிவிருத்தி பெற்ற நாடு எது?
ரஷ்யா.

11. எந்த நாடுகளின் உதவியைக்கொண்டு ரஷ்யா அபிவிருத்தியடைந்தது?
பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ்

12. பிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சி ஏற்படக் காரணமாயிருந்தது எது?
நிலக்கரி, இரும்பு, போன்ற கனியங்களும், வாய்ப்பான இடவசதியும் காணப்பட்டமை.

13. கீழைத்தேசங்களில் பேரரசுகளை உருவாக்கிய நாடுகள் எவை?
போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா.

14. பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகள் எவை?
கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை, இந்தியா.

15. குடியேற்ற காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை எது?
தேயிலை

16. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகப் பயிர்ச்செய்கை எது?
பருத்தி.

17. மலாயாவில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகப்பயிர் எது?
இறப்பர்.

18. மேற்கிந்திய தீவுகளில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகப் பயிர் எது?
கரும்பு.



19. தாய்வானின் வர்த்தகப்பயிர் எது?
கொக்கோ.

20. வர்த்தகப்பயிர்ச் செய்கையினால் குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
தன்னிறைவான வாழ்வியப் பொருளாதாரமுறைமாறி ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார முறை உருவாகின.

21. வர்த்தக விருத்தியால் அபிவிருத்தி செய்யப்பட்ட துறைமுகங்கள் எவை?
இலங்கையில் — கொழும்பு
இந்தியாவில் — கல்கத்தா
பிரேசிலில் — றியோத்ஜெனெய்ரோ
ஹொங்கொங்கில் — ஹொங்கொங்

22. அபிவிருத்தி அடைந்த நாடுகள் கூடுதலாக எந்தக்கண்டங்களில் உள்ளன?
ஐரோப்பா, வடஅமெரிக்கா.

23. அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருந்தும் அதிகளவு பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகள் எவை?
தாய்வான், தென்கொரியா, ஹொங்கொங்.

24. அபிவிருத்தி அடைந்த நாட்டிற்கும், அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?
1. தனிநபர் மொத்த தேசியவருமானம் [தலாவருமானம்]
2. பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண்.

25. அபிவிருத்தி அடைந்துள்ள நாட்டில் காணப்படும் தன்மை எது?
1. சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாக இருக்கும்.
2. அடிப்படைத் தேவைகள் நிறைவு.
3. கைத்தொழில் ஆக்கம் அதிகம்.

26 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் காணப்படும் தன்மை எது?
1. ஆள்வீத வருமானம் குறைவு
2. போசனைக்குறைவு
3. பிறப்பு வீதம் அதிகம்.

27. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அதிகமாகக் காணப்படுவது எது?
உடல்வலுவும், மனிதவளமும் வருமானப்பரம்பலில் வேறுபாடும்

## 5. அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சனைகள்.

1. வளர்ச்சியடைந்த நாடுகளும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எவை?
   1. சனத்தொகை,
   2. குறைந்த வருமானமட்டம்,
   3. வளப் பற்றாக்குறை,
   4. வளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படாமை,
   5. உற்பத்திக் குறைவு,
   6. சமயப் பிரச்சனைகள்,
   7. வேலையில்லாப் பிரச்சனை,
   8. வியாபார நடைமுறைகள்,
   9. கல்வி,
   10. சுகாதாரம்,
   11. சமூகப் பிரச்சனைகள்,
   12. சமயப் பிரச்சனைகள்.

2. 1986-ல் உலகின் சனத்தொகை எவ்வளவு?
   4.600 மில்லியன்.

3. உலகின் மனித வளர்ச்சி வீதம் எவ்வளவு?
   1.7 %

4. சனத்தொகை துரிதகதியில் அதிகரிக்கும் நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் எவை?
   1. உணவு, 2. குறைந்தபட்ச உணவு, உடை, உறையுள்வசதி
   3. வேலைவாய்ப்பு, 4. கல்வி, 5. சுகாதாரம்.

5. உலகின் சனத்தொகை அதிகரிப்பு நிமிடத்திற்கு எவ்வளவு?
   150

6. உலகின் சனத்தொகை வீதத்தை பூச்சியமாகக்கொண்டதாக கருதப்படும் நாடு எது?
   பிரித்தானியா

7. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மரணவீதம் குறைந்தமைக்குரிய காரணங்கள் எவை?
   1. வாந்திபேதி, மலேரியா, வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை வெற்றியளித்தமை,
   2. வைத்திய சேவையின் அபிவிருத்தி,
   3. சுகாதார வசதிகள்.



8. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு குறுக்கீடாக இருப்பது எது?
   1. அதிகரிக்கும் பற்றாக்குறை.
   2. வளங்களின் பற்றாக்குறை,
   3. உள்ள வளங்களை உரியமுறையில் பயன்படுத்தாமை.

9. இயற்கை வளங்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு எதற்கு தூண்டுகோலாக அமையும்?
   நாட்டின் அபிவிருத்திக்கு தூண்டுகோலாக அமையும்.

10. ஒரு நாட்டின் சேமிப்பு குறைவதனால் என்ன ஏற்படும்?
    முதலீடு குறையும்

11. முதலீடு குறைவதனால் என்ன ஏற்படும்?
    உற்பத்தி குறையும்

12. உற்பத்தி குறைவதனால் என்ன ஏற்படும்?
    வருவாய் பாதிக்கும்

13. அபிவிருத்தியை நிர்ணயிக்கின்ற காரணிகள் எவை?
    விவசாய நிலங்கள், தொழிற்சாலைகள்,
    சிறு கைத்தொழில் தாபனங்கள்.

14. தேசிய உற்பத்தியைப் பாதிக்கும் காரணிகள் எவை?
    1. விசேட பயிற்சிபெற்ற உத்தியோகத்தர் இல்லாமை,
    2. கைத்தொழில் நிபுணர்கள் இல்லாமை,
    3. எந்திரிகள், வைத்தியர், ஆசிரியர் இல்லாமை

15. அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் எத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்?
    விவசாயத்தில்

16. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் எந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்?
    கைத்தொழிலில்.

17. நுகர்வு விவசாயம் தேசிய தேவைகளையேனும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாமைக்குரிய காரணங்கள் எவை?
    1. கிராமப்புற சனத்தொகை அதிகரித்தல்
    2. விவசாய நிலங்கள் துண்டாடப்படுதல்,
    3. நிலப் பற்றாக்குறை,

4. நிரந்தரமற்ற காணியுரிமை.
5. பசளைப் பாவனை குறைதல்.
6. நீர்ப்பற்றாக்குறை.
7. இயற்கை இன்னல்கள்.

18. கைத்தொழில் மயமாக்கல் துரிதமாக ஏற்படாமைக்குரிய காரணங்கள் எவை?
மூலதனம், தொழிநுட்ப அறிவு, தொழிற்பயிற்சி, சக்தி வளம், உள்நாட்டு வெளிநாட்டு சந்தை வளம் போதியளவு இல்லாமை, வேலை போதாமை.

19. போதிய வேலையில்லாமை என்றால் என்ன?
வருடம் முழுவதும் வேலையில்லாமல் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் வேலை செய்து விட்டு ஏனைய நாட்களில் வேலையின்றி இருத்தல்.

20. குறைந்த தொழிலில் ஈடுபடுதல் என்றால் என்ன?
ஒருவர் பயிற்சி பெற்ற தொழில் கிடைக்காமையினால் வேறு ஒரு தொழிலை மேற்கொள்ளுதல். இதுவும் வேலை போதாமையாகும்.

21. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ள படித்தவர்கள் வேறு நாடுகளுக்கு வேலைதேடி செல்வதற்குரிய காரணங்கள் எவை?
1. பயிற்சிக்கு ஏற்ற தொழில் வாய்ப்பு இல்லாமை
2. எதிர்பார்த்த ஊதியம் கிடைக்காமை.

22. படித்தவர்கள் வெளிநாடு செல்வதை எவ்வாறு அழைப்பர்?
மூளை வெளியேற்றம் அல்லது புத்தி ஜீவிகள் வெளியேற்றம்.

23. அபிவிருத்தி அடைந்த நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் எவை?
போதைவஸ்து, நோய், ஒழுக்கச் சீர்கேடு போன்றவை.

24. அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகள் சர்வதேச சந்தையில் எதிர் நோக்கும் பிரச்சனைகள் எவை?
1. பல நாடுகள் ஒரே மாதிரியான பொருட்களை செய்தல்.
2. பல பொருட்களுக்கு பதிலாக மாற்றீட்டு பொருட்கள் சந்தையில் காணப்படுதல்
3. விலைத்தளம்பல்



## 6. அபிவிருத்திக்குரிய வழிவகைகள்.

1. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வளமாகவுள்ளதும் அதேவேளையில் அந்நாடுகளின் அபிவிருத்திக்கு குறுக்கீடாகவுள்ளதும் எது?
அந்நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பு

2. அபிவிருத்திக்கு குறுக்கீடாகவுள்ள பிரச்சனைகளை தீர்க்க முதலில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எது?
சனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தல்

3. அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளின் பொருளாதார முறையில் அபிவிருத்தியைப் பாதிக்கும் செயற்பாடுகள் எவை?
1. குறைந்த வருமானம் 2. நுகர்வு செலவு அதிகரித்தல்
3. சேமிப்பு குறைதல் 4. மூலதனம் குறைதல்
5. உற்பத்தி குறைதல்.

4. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மூலதனச்சம்பாத்தியத்தை எவ்வாறு அதிகரிக்கலாம்?
1. தேசிய சேமிப்பை பெருக்குவதன் மூலம்.
2. வெளிநாட்டு செலவாணியை பெருக்குவதன் மூலம்.
3. பிறநாட்டு உதவியாக கிடைக்கும் வளங்களை நுகர்வுக்கு பயன்படுத்தாது கைத்தொழில் விவசாயத் துறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம்.

5. விவசாயத் துறையின் அபிவிருத்திக்கு என்ன செய்ய வேண்டும்?
உற்பத்தியை பெருக்க வேண்டும்.

6. விவசாய உற்பத்தியைப் பெருக்க என்ன செய்ய வேண்டும்?
பயிர்ச் செய்கைக்குரிய காணிகளைப் பெருக்குதல்
அறுவடையைப் பெருக்கக் கூடிய வழிவகைகளைக்கையாளுதல்
சுழற்சி முறைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுதல்.

7. உற்பத்தியைப் பெருக்க அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட விசேட திட்டங்கள் எவை?
1. அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதையினங்களை அறிமுகம் செய்தல்.
2. நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுத்தல்.
3. செயற்கைப் பசளை, கிருமிநாசினி போன்றவற்றைப் பயன்படுத்தல்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

4. விவசாய விரிவாக்க சேவைகளை வழங்குதல்.
5. விநியோக வசதிகளையும், கடன் வசதிகளையும் செய்து கொடுத்தல்
6. பயிர்க் காப்புறுதி செய்தல்.

8. எந்த விதமான கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்?
இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு பதிலான பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களை.

9 பிறநாட்டு இயந்திர சாதனங்களுக்கும் எரிபொருளுக்கும், ஏற்படும் செலவைக் குறைக்க என்ன செய்ய வேண்டும்?
மனித உழைப்பின் மூலம் அந்நாட்டு வளங்களை பயன்படுத்த வேண்டும்

10. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்வி முறை எந்தக் குறிக்கோளையுடையதாக இருக்க வேண்டும்?
1. சமூகப் பொருளாதார அபிவிருத்தியை அடையும் கல்விமுறையாக இருக்க வேண்டும்.
2. அபிவிருத்திக்கு ஏற்ப முகாமைத்துவம் தொழிற்பயிற்சி ஆகியவற்றைப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும்.

11. இந்நாடுகளின் கல்வித்துறையின் முக்கிய கடமை என்ன?
சமுதாயத்திற்கு ஏற்ற நல்ல மனப்பாங்குகளை வளர்ப்பதாகும்.

12. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த மேற்கொள்ளும் முயற்சிகள் எவை?
1. உயர்தர தொழில் நுணுக்க முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்குதல்.
2. சுதந்திர நடைமுறைக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
3. உற்பத்தித் துறையில் தனியாரை ஈடுபடுத்தல்.

13. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வேறு எவ்வகைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளன?
கடற்றொழில், கால்நடை வளர்ப்பு.

# 7 சர்வதேச தாபனங்கள்

1. உலக அபிவிருத்திக்கு கைகொடுக்கின்ற சர்வதேச தாபனங்கள் எவை? அவை ஆரம்பித்த ஆண்டையும் கூறுக?
அ. சர்வதேச புனரமைப்பும் அபிவிருத்தி வங்கியும் [IBRD] 1945-ல்
ஆ. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் [IDA] 1960-ல்
இ. ஆசிய அபிவிருத்தி வங்கி [ADB] 1965-ல்



ஈ. தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் அல்லது ஆசியான் [ASEAN] 1967-ல்
உ. உலக சுகாதார தாபனம் [WHO] 1948-ல்
ஊ. உணவு விவசாய தாபனம் [FAO] 1945-ல்
எ. சர்வதேச நிதியம் [IMF] 1956-ல்
ஏ. கொழும்புத்திட்டம் [Colombo Plan] 1951-ல்.

2. இலங்கை அங்கம் வகிக்கும் பொது தாபனங்கள் சில கூறுக?
1. ஐக்கியநாடுகள் சபை. 2. பொதுநலவாயம்.
3. அணிசேரா நாடுகள் இயக்கம் 4. சார்க் அமைப்பு
5. பொதுநல அமைப்பு நாடுகள்

3. சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கியின் குறிக்கோள் என்ன?
உறுப்பு நாடுகளுக்கு பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு கைகொடுத்து உதவுவது.

4. மேற்படி வங்கியுடன் இணைந்த இரண்டு தாபனங்கள் எவை?
1. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA)
2. சர்வதேச நிதி கூட்டுத்தாபனம் (IFC) 1956-ல்.

5. சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் குறிக்கோள் என்ன?
410 டொலருக்கு குறைந்த தலா வருமானம் பெறும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு நீண்டகால வட்டியில்லாக் கடன் வழங்குதல்

6. உலக வங்கி எதை உள்ளடக்கியதாகும்?
சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கியையும், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தையும்

7. உலக வங்கியில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?
150 - நாடுகள்.

உலகவங்கியிடமிருந்து

8. விவசாய அபிவிருத்திக்கும் கிராமிய அபிவிருத்திக்கும் கடன்பெற்ற நாடுகள் சில கூறுக?
பிரேசில், இந்தியா, நைஜீரியா, இந்தோனேசியா, பாகிஸ்தான்

9. சக்தி வளத்தை அபிவிருத்தி செய்ய கடன்பெற்ற நாடுகள் சில கூறுக?
இந்தியா, பிரேசில், தென்கொரியா, சீனா, துருக்கி.

10. கைத்தொழில் அபிவிருத்திக்கு கடன்பெற்ற நாடுகள் சில கூறுக?
இந்தியா, ஹங்கேரி, சைப்ரஸ்.

11. இலங்கை 1986 - வரை எத்தனை திட்டங்களுக்கு எவ்வளவு கடன் பெற்றுள்ளது?
12 - திட்டங்களுக்கு, 210 - 7 மில்லியன் அமெரிக்க டொலர்.

12. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 1986 - ல் இலங்கைக்கு எத்தனை திட்டங்களுக்கு கடன் வழங்கியுள்ளது?
4 - திட்டங்களுக்கு.

13. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமை அலுவலகம் எங்கேயமைந்துள்ளது?
பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மணிலா நகரில்.

14. ஆசிய அபிவிருத்தி வங்கியில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?
ஆசிய பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 31 - நாடுகளும், மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா போன்ற 14 – நாடுகளுமாக மொத்தம் 45 -நாடுகள்.

15. உலக சுகாதார தாபனத்தின் தலைமைச் செயலகம் எங்கேயுள்ளது?
சுவிற்சிலாந்தில் உள்ள ஜெனிவா நகரத்தில்

16. உலக சுகாதார தாபனத்தின் குறிக்கோள் என்ன?
''சகலருக்கும் சுகவாழ்வு'' சகல மக்களுக்கும் மிகவுயர்ந்த சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல்.

17. உலக சுகாதார தாபனத்தின் சேவைகள் எவை?
1. நோய்களைக் கட்டுப்படுத்தலும், வேரோடழித்தலும்.
2. தேவைகளுக்கு உகந்த வகையில் சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல்.
3. தேசிய சுகாதார கட்டுக்கோப்பினை வலுவடையச் செய்யும் திட்டங்களுக்கு உதவிபுரிதல்.

18. 1986- ல் உலகசுகாதார தாபனத்தில் எத்தனை நாடுகள் அங்கம் வகித்தன?
166 - நாடுகள்.

19. உலக விவசாய தாபனத்தின் தலைமை அலுவலகம் எங்கேயுள்ளது?
உரோமாபுரியில்.

20. 1986-ல் உணவு விவசாய தாபனத்தில் எத்தனை நாடுகள் அங்கம் வகித்தன?
156 - நாடுகள்.



21. உணவு விவசாய தாபனத்தின் குறிக்கோள் என்ன?
'' எல்லோருக்கும் உணவு கிடைக்கட்டும் ,,
1. அங்கத்துவ நாடுகளின் மக்களுடைய போசணை மட்டத்தையும் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்துதல்.
2. சகல உணவுப் பொருட்களினதும், விவசாயப் பொருட்களினதும் உற்பத்தி அபிவிருத்தி ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல்.
3. கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்

22 உணவு விவசாய தாபனம் ஆற்றும் சேவைகள் என்ன?
1. தொழில் நுணுக்க உதவிகள் வழங்குதல்,
2 தகவல்களை பெற்றுக் கொடுத்தல்,
3. கொள்கைகள், திட்டங்கள்பற்றி அரசாங்கங்களுக்கு அறிவுரை வழங்குதல்,
4. உணவு விவசாயம் சம்பந்தமாக நிபுணர்களுக்குத் தேவையான கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்தல்.

23 உணவு விவசாய தாபனம் விவசாயம் தவிர்ந்த வேறு எந்தத் தொழில்களில் கவனம் செலுத்தியுள்ளது?
விலங்குவேளாண்மை, கடற்றொழில், வனக்கைத்தொழில்.

24 கொழும்புத்திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தத் தொடங்கியது?
1951-ல்

# 8. அபிவிருத்தி அடைந்துவரும் இலங்கை.

1. இலங்கையின் பொருளாதார முறை எதைச் சார்ந்துள்ளது?
விவசாயத்தைச் சார்ந்துள்ளது

2 புராதன இலங்கையின் மக்கள் கூடுதலாக எந்தப் பகுதிகளில் வாழ்ந்தனர்?
கிராமங்களில்

3. அக்காலங்களில் கிராமங்களின் பொருளாதாரநிலை எவ்வாறு இருந்தது?
தன்னிறைவுடையனவாக இருந்தது

4. புராதன இலங்கையின் முக்கிய பொருளாதார வளமான காணிகள் யாருக்கு சொந்தமாக இருந்தது?
அரசனுக்கு சொந்தமாக இருந்தது

5. மக்கள் ஊதியமின்றி அரசனுக்கு சேவை செய்தமை எவ்வாறு அழைக்கப்பட்டது?
இராசசேவை என (இராசகாரியம்)

6. புராதன காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியப் பயிர்கள் எவை?
குரக்கன், உழுந்து, பயறு, என்று.

7. விவசாயத்தைவிட மேற்கொள்ளப்பட்ட ஏனைய தொழில்கள் எவை?
மாடுவளர்த்தல், வேட்டையாடுதல், மீன்பிடித்தல்.

8. பண்டைக் கால சமுதாயங்களில் காணப்பட்ட இயல்பு என்ன?
ஒவ்வொரு தொழிலையும் செய்தவர்கள் ஒவ்வொரு சாதியாக கணிக்கப்பட்டனர்

9. புராதன காலத்தில் இலங்கையில் எந்தமுறையில் வர்த்தகம் நடைபெற்றது?
பண்டமாற்று முறையில்.

10. அக்காலத்தில் வியாபாரத்தின் பொருட்டு இலங்கைக்கு எந்த நாட்டினர் வந்தனர்?
இந்தியர், அராபியர், சீனர், உரோமர், கிரேக்கர், பாரசீகர்.

11. முழு இலங்கையினதும் ஆதிக்கத்தைப் பெற்ற அந்நிய நாடு எது?
பிரித்தானியா

12. பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்களாக செய்கை பண்ணிய பயிர்கள் எவை?
கோப்பி, தேயிலை, இறப்பர், தென்னை.

13. கோப்பிப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தவர்கள் யார்?
பிரித்தானியர்.

14. கோப்பித் தோட்டத்திற்கு தொழிலாளர்கள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டனர்?
தென் இந்தியாவிலிருந்து.

15. கோப்பி பயிருக்கு ஏற்பட்ட நோய் என்ன?
திலிர.

16. பெருந்தோட்ட பயிர்ச்செய்கை மூலம் ஏற்பட்ட நன்மைகள் எவை?
பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள், துறைமுக அபிவிருத்தி செய்யப்பட்டமை, தந்திச் சேவைகள், வங்கிமுறைகள், கல்விவசதி என்பன,



17. பிரித்தானியர் காலத்தில் விவசாய வளர்ச்சி குன்றக் காரணமாயிருந்தது எது?
வளமான நிலங்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக எடுக்கப்பட்டமையாகும்.

18. இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் இறப்பர் மூலம் கிடைப்பது எவ்வளவு?
14 ./.

19. உலக இறப்பர் உற்பத்தியில் இலங்கையில் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது?
4 ./.

20 தேசிய ஏற்றுமதி வருமானத்தில் தேங்காய் மூலம் கிடைப்பது எவ்வளவு?
8 ./.

21 உலக தேங்காய் ஏற்றுமதியில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவது எவ்வளவு?
6 ./.

22. 1971 - ம் ஆண்டில் சனத்தொகை வளர்ச்சி வீதம் எவ்வளவு?
2.3 ./.

23. 1984 - ம் ஆண்டில் சனத்தொகை வளர்ச்சி வீதம் எவ்வளவு?
1 . 7 ./.

24. சனத்தொகை வளர்ச்சி வீதம் 1 . 7 வீதமாக இருந்தால் எத்தனை ஆண்டுகளில் இருமடங்காகும்?
41 - வருடங்களில்.

25. எமது நிலப்பரப்பில் எத்தனை வீதம் பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலமாகும்?
40 ./.

26. துரித மகாவலித்திட்டத்தின் கீழ் எவ்வளவு காணிகளில் பயிர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?
130, 000 எக்ரேயர் (320, 000 ஏக்கர் )

27. எந்தவிதமான தொழிலில் மக்கள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்?
விவசாயத்துறையில்.

28. இலங்கையின் சனத்தொகையில் தங்கியிருப்போர் எத்தனை வீதமாகும்?
66 ./.

29. கூடுதலாக வேலையற்றிருக்கும் மக்களின் கல்வி மட்டம் எது?
க . பொ . த . சா/த, ( O/L ) க . பொ . உ/த ( A/L )

30. வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் எத்தனை வீதமாகும்?
9 . 7 ./.

## 9. இலங்கை அபிவிருத்தியின் புதிய நோக்கு

1. வாழ்வாதாரப் பயிர்ச் செய்கையை அலட்சியம் செய்ததால் ஏற்பட்ட விளைவு என்ன?
உணவுப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

2. விவசாய ஆராய்ச்சி பயிற்சி தாபனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது.
1972 ல்.

3. விவசாயம் சம்பந்தமான பிரச்சனைகள் பற்றி நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட தாபனம் எது?
விவசாய அபிவிருத்தி சபை (1-1-78 முதல் இயங்குகிறது)

4. விவசாயிகள் காப்புறுதித் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
மார்ச் 1987 ல்.

5. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பல நோக்கு அபிவிருத்தித் திட்டம் எது?
கல்லோயா பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் 1949 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

6. இதுவரை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் மிகப் பெரியது எது?
மகாவலி அபிவிருத்தித் திட்டம்.

7. மகாவலித் திட்டத்தின் கீழ் எந்த மாவட்டங்களுக்கு நீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
அநுராதபுரம், பொலநறுவை, வவுனியா.

8. மகாவலித் திட்டத்தினால் அடையும் நன்மைகள் எவை?
1. நீர்ப்பாசனத்திற்காக புதிய நீர்த்தேக்கங்கள் அமைத்தல்.
2. தேக்கிவைத்த நீரை நீர்ப்பாசனத்திற்கு விடுமுன் நீர் மின்னை உற்பத்தி செய்தல்.
3. புதிய குடியிருப்புகள் அமைத்தல்.
4. உணவுப் பயிர்ச் செய்கையை விரிவாக்குதல்
5. புதிய தொழில் வாய்ப்புக்களை உண்டாக்குதல்.
6. கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
7. வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தல்.
8. நன்னீர் மீன் வளர்ப்பை ஆரம்பித்தல்
9. விலங்கு வேளாண்மையை விருத்தி செய்தல்.



9. எந்த உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு மகாவலி அபிவிருத்திச் சபை கவனம் செலுத்தியுள்ளது?
கரும்பு சோயா அவரை, கொம்புப் பயறு, பயறு, கடலை, மிளகாய், வெங்காயம், காய்கறிவகை, நிலக்கடலை, போன்றவற்றிற்கு.

10. மகாவலித் திட்டத்தின் காரணமாக சூழலில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கை எவை?
1. வனவிலங்குகளுக்கான புகலிடங்கள் அமைத்தல்,
2. நீரேந்து பரப்புகளைப் பாதுகாத்தல்,
3. வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல்.

11. மகாவலித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதான நீர்த்தேக்கத் திட்டங்களும் அவற்றிற்கு உதவிவழங்கும் நாடுகளும்?
1. விக்ரோரியா [பிரித்தானியா] 2 கொத்மலை [சுவீடன்]
3. மாதுறு ஓயா [கனடா] 4. றந்தெனிகலை [ஜேர்மனி]
5. ரன்தெம்பை [யப்பான்]

12. மகாவலித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நீருக்கு நீர்ப்பாசனக் கட்டணம் ஏக்கருக்கு எவ்வளவு அறவிடப்பட்டது?
109 ரூபா

13. இலங்கையில் உள்ள ஏனைய நீர்ப்பாசனத் திட்டங்கள் எவை?
கிரிந்தி ஓயா, இங்கினி மிட்டிய, முத்துகண்டியா ஜின்கங்கை, நில்வளாகங்கை என்பன.

14. ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டம் எப்போது எங்கு ஆரம்பிக்கப்பட்டது?
1979-ல் குருணாகலையில்

15. மேற்படி திட்டம் நடைமுறையில் இருக்கும் மாவட்டங்கள் எவை?
குருணாகல், மாத்தறை, அம்பாந்தோட்டை, நுவரெலியா, மாத்தளை புத்தளம், பதுளை, வவுனியா, மன்னார், இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, முல்லைத்தீவு, கண்டி, கம்பகா.

16. மேற்படி கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கொள்கை என்ன?
ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களையும் ஒன்றிணைத்து பொருளாதார சமூக அபிவிருத்திகளைத் துரிதப்படுத்தல்.

17. ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திக்கு உதவி வழங்கும் சர்வதேச தாபனங்கள் எவை?
1. உலகவங்கி
2. சர்வதேச விவசாய நம்பிக்கை நிதித்தாபனம்.



Pam 1325-

Date:

3. நோராட் [நோர்வே அபிவிருத்தி உதவி]
4. சீடா [சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையம்]

18. இலங்கையைச் சுற்றியுள்ள மீன்பிடிக்கு வாய்ப்பான கடற்கரையோரம் எவ்வளவு?
1367 கிலோ மீற்றர்

19. இலங்கையின் கடற்கரையை அடுத்துள்ள கண்டமேடையின் பரப்பளவு என்ன?
21,756 சதுர கிலோ மீற்றர்

20. கூடுதலான மீனைக் கொண்டுள்ள நீர்ப்பகுதி எது?
உவர்நீர்த் தேக்கங்கள் [கடனீரேரிகள்]

21. உள்நாட்டு மீன்பிடி நீர் நிலைகள் எவை?
ஆறுகள், குளங்கள்,

22. நன்னீர் மீன்வளர்ப்பிற்கு பயன்படுத்தக்கூடிய உள்நாட்டு நீர்நிலைகளின் பரப்பளவு எவ்வளவு?
777 சதுர கிலோ மீற்றர்

23. மீன்வளத்தை எத்தனை வகையாக பிரிக்கலாம் அவை எவை?
1. உப்புநீர் [கடல்நீர்] மீன்வளம்
2. உவர்நீர் [களப்புநீர்] மீன்வளம்
3. நன்னீர் மீன்வளம்

24. விலங்குப் புரத உணவு எதில் கூட உண்டு?
மீனில்.

25. ஒருவரின் நாளாந்த உணவில் சேரவேண்டிய மீனின் அளவு எவ்வளவு?
60 கிராம்.

26. இலங்கைக்கு உரித்தான சமுத்திர எல்லை எது?
கரையிலிருந்து 320 கிலோ மீற்றர்

27. மீனவக் கைத்தொழில் எத்தனை வகைப்படும் அவை எவை?
மூன்று வகைப்படும் அவையாவன
1. கரையோர மீனவக் கைத்தொழில் [கண்டமேடைப்பிரதேசம்]
2. ஆழ்கடல் மீனவக் கைத்தொழில் [கரையிலிருந்து 40 கி.மீ அப்பால்]
3. உள்நாட்டு மீனவக் கைத்தொழில்.



Date:

28. கண்டமேடை இலங்கையை சுற்றி எத்தனை கி. மீற்றர் அகன்றுள்ளது?
24 கி. மீ.

29. கண்ட மேடையின் சராசரி ஆழம் எவ்வளவு?
80 மீற்றர்

30. யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு வடக்கேயுள்ள கண்ட மேடையின் பெயரென்ன? அதன் பரப்பளவு என்ன?
''பேதுரு கடற்றளமேடை'' 2,599 ச. கி. மீற்றர்

31. இப்பகுதிகளில் உண்டாகும் மீனுணவு என்ன?
''பிளாந்தன்''

32 பிளாந்தன் எனப்படும் நுண்ணிய உயிரினம் எவ்வாறு உண்டாகிறது?
ஆழம் குறைந்த கடற்பகுதியில் சூரிய ஒளி ஊடுருவிச் செல்வதால் ஒளித்தொகுப்பு முறைமூலம் உருவாகிறது

33. மீனைவிட கண்ட மேடைகளில் வேறு எவற்றைப் பெறலாம்?
முத்துச் சலாபங்களும், முத்துச் சிப்பிகளும்.

34. சீடா தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கடற்றொழில் பயிற்சி நிலையம் எங்கேயுள்ளது?
நீர்கொழும்பில்

35. ஆழ்கடல் மீன்பிடிக்கு பயன்படுவன எவை?
துரோலர் கப்பல்களும், பைப்பிரஸ் கண்ணாடி வள்ளங்களும்.

36. நன்னீர் மீனுற்பத்திக்கு குறுக்கீடாக இருப்பது எவை?
நுகர்வோருடைய விருப்பு, கலாசார காரணிகள் என்பன.

37. இலங்கையில் நவீன மீன்பிடித் துறைமுகங்கள் எங்கேயுண்டு?
1. முகத்துவாரம் [மோதரை] 2. காலி,
3. மிரிசை, 4. தங்காலை.

38. ஆழ்கடலில் மீனினங்கள் ஏராளமாகக் காணப்படும் இடங்களைக் கண்டறியப் பயன்படும் கருவி எது?
''எக்கோ சவுண்டர்''

39. இலங்கையில் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் எப்போது நிறுவப்பட்டது?
1964-ல்

40. மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ன?

1. மீன்பிடிப்பதற்கான உபகரணங்கள் போதியளவு இல்லாமை
2. படகு செய்யத் தேவையான வெட்டுமரம் போன்ற மூலப் பொருட்கள் குறைவாயிருத்தல்
3. நவீன மீனவத் தொழில் பற்றிய பயிற்சியின்மை,
4. வறுமை நிலை

41. இலங்கையில் புராதன கைத்தொழில்கள் முன்னேற்றமடையாமைக்கு காரணம் என்ன?

1. இலங்கை அந்நியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தமை,
2. பாவனையாளர்கள் பிறநாட்டு பொருட்களை விரும்பியமை.

42. கைத்தொழில் மேம்பாட்டுக்கு உருவான பத்தாண்டுத்திட்டம் எந்தக் காலப்பகுதியாகும்?

1959 — 1969

43. இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கு தடையாக இருந்தது எது?

மூலதனமும், தொழில்நுட்ப அறிவும்.

44. இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி தாழ்நிலையில் இருந்தமைக்கான காரணங்கள் எவை?

1. கைத்தொழில் விருத்தியடைந்த ஒரு நாட்டின் குடியேற்ற நாடாக 150 ஆண்டுகள் இருந்தமை,
2. குடியேற்ற ஆட்சியாளரின் ஆதரவு கைத்தொழிலுக்கு இல்லாமையால் மரபு முறைக் கைத்தொழில்கள் அழிந்தமை,
3. நவீன கைத்தொழில் மரபுகள் தோன்ற வாய்ப்பான சூழ்நிலை இருக்காமை.
4. குடியேற்ற ஆட்சியாளர்கள் இறக்குமதிப் பொருட்களை விற்கும் சந்தையாகவும், தமக்கு வேண்டிய மூலப்பொருட்களைத் தயாரிக்கும் நாடாகவும் இலங்கையைக் கருதியமை.

45. கைத்தொழிற்சாலை நிறுவும் இடத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணிகள் எவை?

1. மூலப்பொருள், 2. சந்தை, 3. உழைப்பு,
4. வலுவளம் 5. மூலதனம், 6. தாளாண்மை (முயற்சி)
7. அரசபூட்கை,

46. தாளாண்மை என்றால் என்ன?

நிலம், மூலதனம், உழைப்பு, ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்து தொழிற்பாட்டை ஒழுங்கமைக்கும் காரணியே தாளாண்மை எனப்படும்,





47. தற்போழுது இலங்கையில் நடைமுறையில் இருக்கும் மூன்று கைத்தொழிற் பிரிவுகளும் எவை?

1. பேரளவுக் கைத்தொழில், 2. சிற்றளவுக் கைத்தொழில்,
3. குடிசைக் கைத்தொழில்.

48. மூலப் பொருட்கள் கிடைக்கும் வசதியைக் கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் எவை?

1. காங்கேசன்துறை, புத்தளம் — சீமெந்து தொழிற்சாலை
2. வாழைச்சேனை — கடதாசித் தொழிற்சாலை
3. ஜின்தோட்டை — ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை
4. கல்லோயா, நில்வளகங்கை — ஓட்டுத் தொழிற்சாலை
5. அம்பாறை, கந்தளாய் — சீனித் தொழிற்சாலை
6. பரந்தன் — இரசாயனத் தொழிற்சாலை

49. இலங்கையில் முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் எங்கேயுண்டு?

கட்டுநாயக்காவிலும், பியகமவிலும்

50. 85-ம் ஆண்டளவில் முதலீட்டு அபிவிருத்தி வலயத்தில் எத்தனைபேர் நேரடி வேலைவாய்ப்பு பெற்றனர்?

32529 பேர்

51. 90-ம் ஆண்டளவில் முதலீட்டு அபிவிருத்தி வலயத்தில் எத்தனை பேர் வேலைவாய்ப்பு பெற்றனர்?

71358 பேர்

52. முதலீட்டு அபிவிருத்தி வலயத்தில் 85-ம் ஆண்டில் எத்தனை திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன?

211 திட்டங்கள்

53. 90-ம் ஆண்டில் எத்தனை திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன?

337 திட்டங்கள்

54. 85-ம் ஆண்டில் எத்தனை திட்டங்கள் உற்பத்தியில் ஈடுபட்டன?

54 திட்டங்கள்

55. 90-ம் ஆண்டில் எத்தனை திட்டங்கள் உற்பத்தியில் ஈடுபட்டன?

120 திட்டங்கள்

56. 85-ம் ஆண்டில் முதலீட்டு அபிவிருத்தி வலயத்தின் மூலம் கிடைத்த வெளிநாட்டு செலாவணி எவ்வளவு?

3,802 மில்லியன் ரூபா

No.

Date:

57. 90-ம் ஆண்டில் கிடைத்த வெளிநாட்டு செலாவணி எவ்வளவு?
1752 5 மில்லியன் ரூபா

58 முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் மூலம் கிடைக்கும் நன்மைகள் எவை?
1. மூலதனம், 2. வெளிநாட்டு தொழில் நுணுக்கம்
3, முகாமைத்துவ முறைகள் 4, வேலைவாய்ப்பு.
5, அந்நிய செலாவணி

59. எமது நாட்டின் அபிவிருத்தித் துறையின் புதியநோக்கு என்ன?
எமது நாட்டிற்கு பொருத்தமான தொழில் நுணுக்கம் பற்றி ஆராய்வதாகும்

60. எமது நாட்டின் கைத்தொழில்கள் எதைப் பின்பற்றுகின்றன?
பிறநாட்டு தொழில நுணுக்க முறைகளை

61. பிறநாட்டு இயந்திரங்களையும், தொழில் நுணுக்க முறைகளையும் கையாளுவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் எவை?
1. பிறநாட்டு செலாவணி அதிகரித்தல்
2. சக்தி அதிகமாக செலவாகிறது
3. மனித உழைப்பு பயன்படுத்தப்படாமல் போகிறது

62. மேற்படி முறைகளைக் கையாளுவதால் ஏற்படும் சாதகமான விளைவுகள் எவை?
1. உற்பத்திப் பெருக்கம்,
2. உற்பத்தியின் தரம் கூடுதல்,
3. காலதாமதமின்மை.

63. அபிவிருத்தித் துறைக்கு கைகொடுத்து உதவும் முக்கிய காரணிகள் என்ன?
போக்குவரத்தும், ஏற்றியிறக்கலும்.

64. அபிவிருத்திக்கு உதவும் போக்குவரத்துத் துறைகள் எவை?
புகையிரதம், பெருந்தெருக்கள், துறைமுகங்கள், விமானச்சேவை.

65 ஏற்றியிறக்கல் வேலைகளைத் திறமையாக மேற்கொள்ள போக்குவரத்து துறையில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
சிப்பங்கட்டும்முறை (கொள்கலம்)

66, இலங்கையில் பேருந்து சேவை எப்போது தேசியமயமாக்கப்பட்டது?
1958-ல்



No.

Date:

67. பெருந்தெருக்களில் பிரயாணச் சேவைகளை நடாத்த தனியாருக்கு எப்போது அனுமதியளிக்கப்பட்டது?
1979-ல்

68 போக்குவரத்தைப் புனரமைக்க வகுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1985-ல்

69. கொழும்புத் துறைமுகம் எப்போது தேசியமயமாக்கப்பட்டது?
1958-ல்

70. துறைமுகத்தை நிருவகிக்க ஆரம்பிக்கப்பட்ட தாபனம் எது?
துறைமுக சரக்குப்பொருட் கூட்டுத்தாபனம்

71 துறைமுக அதிகாரசபை எப்போது நிறுவப்பட்டது?
1979-ல்

72, வர்த்தகம் சாராத சக்தி தோற்றுவாய்கள் எவை?
விறகும், விவசாயக் கழிவுப் பொருட்களும்.

73 வர்த்தகச் சக்தி தோற்றுவாய்கள் எவை?
பெற்றோலியப் பொருட்களின் சக்தி, நீர்மின்வலு, வாயுவலு,

74. ஒரு நாட்டின் அபிவிருத்தி மட்டம் ஏற்படும்போது எதன் நுகர்வு அதிகரிக்கும்?
சக்தி நுகர்வு அதிகரிக்கும்.

75. மின்வலு இலங்கையில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது
1859-ல்

76. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது நீர்மின்வலு நிலையம் எது?
லக்சபானா

77. பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நீர்மின்வலு நிலையங்கள் எவை?
இங்கினியாகலை, உடவளவை, விமலசுரேந்திர பொல்பிட்டிய, புதிய லக்சபானா, உக்குவல, விக்ரோறியா கொத்மலை, றந்தெனிகல சமனலவாவி, கனியோன் (இரண்டாம் கட்டம்) போவத்தனை.

78. வெப்ப மின்வலு எங்கே உற்பத்தி செய்யப்படுகிறது?
களனிதிஸ்ஸ, சபுகஸ்கந்தை

Date:

79. பிறசக்தி தோற்றுவாய்கள் எவை?
உயிரியல் வாயு, காற்று, சூரியஒளி.

80. எந்த தாபனங்களின் உதவியுடன் இலங்கை அரசு காடு வளர்ப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது?
1. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிலையம்,
2. ஆசிய அபிவிருத்தி வங்கி.

81 எதன் மூலம் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி ஊக்குவிக்கப்படுகிறது?
வீடமைப்பு மூலம்

82 எந்த நிறுவனங்கள் மூலம் வீடமைப்பு கடன்கள் வழங்கப்பட்டன?
அரசாங்க அடமான வங்கி. தேசிய வீடமைப்பு திணைக்களம்,
அரசாங்க வங்கிகள்.

83. மாதிரிக் கிராம முறைமூலம் வீடமைக்கும் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1978-ல் (இது கிராம எழுச்சி (கம்முதாவ( என அழைக்கப்பட்டது)

84. பத்துலட்சம் வீட்டுத் திட்டம் எப்போ ஆரம்பிக்கப்பட்டது?
1984-ல்

85. நகர அபிவிருத்தி சபையின் குறிக்கோள் என்ன?
நகரில் சேரிகளிலும், குடிசைகளிலும் வசிக்கின்றவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாகும்

86. நகர அபிவிருத்தி சபை எப்போது ஆரம்பிக்கப்பட்டது.
1978-ல்

87. நகரை அபிவிருத்தி செய்யும் போது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனைய திட்டங்கள் எவை.
1. நிருவாகப் பன்முகம், 2. வர்த்தகப் பன்முகம்.
3. கைத்தொழில் திட்டம் 4. ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டம்
5. கல்வி. சமூக, கலாசார பன்முகம்
6 குடிசைகளையும் சேரிகளையும் தரமுயர்த்தும் திட்டம்

88. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இலங்கையின் கல்வி முறை எவ்வாறிருந்தது?
அவர்களுடைய பொருளாதார நிருவாகத் தேவைகளுக்கு ஏற்றதாக இருந்தது





89. ஆங்கிலேயர் காலத்திலிருந்த இருவகை பாடசாலைகளுமெவை?
1. ஆங்கிலப் பாடசாலைகள் 2, சுயமொழிப் பாடசாலைகள்;

90. இலவசக் கல்விச் சட்டம் யாரால் எப்போது கொண்டுவரப்பட்டது
C. W. W. கன்னங்கராவினால், 1945-ம் ஆண்டில்

91, கல்வியமைப்பை மாற்றியமைக்க கொண்டுவரப்பட்ட இரண்டு கருத்துக்களுமெவை?
1, பொருத்தமான கல்வி, 2. பயனுடைய கல்வி.

92. தொழில் நுட்பக் கல்வி எப்போது முக்கியத்துவம் பெற்றது!
1960-ல்

93 கல்விச் சேவைகள் அமைச்சு எப்போது தாபிக்கப்பட்டது?
1980-ல்

94 உயர்கல்வியைக் கவனிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட அமைச்சு எது? எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
உயர்கல்வி அமைச்சு, 1981-ல் ஆரம்பிக்கப்பட்டது.

95. தொழில்துறைக் கல்வியை வழங்கும் நோக்குடன் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறிகள் எவை?
1. நிருவாகம், 2 கட்டிடம். 3 வனபரிபாலனம்,
4. கடற்றொழில், 5 கணனி விஞ்ஞானம் 6 விஞ்ஞான முகாமைத்துவம், 7. புடவைக்கைத்தொழில்

96. மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு ஈடுபட்டுள்ள அமைச்சுக்கள் எவை?
மகளிர்விவகார போதனா வைத்தியசாலை அமைச்சு, சுகாதார அமைச்சு' ஆயுர்வேத வைத்திய அமைச்சு என்பன.

97, குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்திற்குள் கொடுக்கப்படும் தடை மருந்து எது?
காசநோய்த் தடுப்பு மருந்தான பி. சி ஜி

1796-1948

Date

# பகுதி 2.

# வரலாறு

## 1. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி.

1. இலங்கையில் பிரித்தானியர் ஆதிக்கம் எந்தக் காலப்பகுதியாகும்?
1796- ஆம் ஆண்டு முதல் 1948-ம் ஆண்டுவரை.

2. பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை எப்போது சுதந்திரமடைந்தது?
1948-ம் ஆண்டு மாசி மாதம் 4-ம் திகதி.

3. இந்தியாவில் சென்னை எப்போது ஆங்கிலேயர் வசமானது? 1748-ல்

4. கரையோர மாகாணங்கள் எந்த ஆட்சியின் கீழ் இருந்தது?
சென்னை அரசாங்கத்தின் கீழ்.

5. பிரித்தானியர் இந்தியாவில் செயின்ற் ஜோர்ஜ் கோட்டையை எத்தனை யாம் ஆண்டில் கட்டினார்கள்? 1639-ல்.

6. கங்கையாற்றின் முகத்துவாரப் பகுதியில் பிரித்தானியர் எத்தனையாம் ஆண்டில் வியாபாரத் தாபனங்களை அமைத்தனர்? 1651-ல்.

7. இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ள பம்பாய் எவ்வாறு இரண்டாம் சாள்ஸிற்கு கிடைத்தது?
1661-ல் போர்த்துக்கேய இளவரசியை திருமணம் செய்ததால் சீதனமாக கிடைத்தது.

8. இந்தியாவில் பிரித்தானியரின் மத்திய வர்த்தக நிலையங்களாக விளங்கிய இடங்கள் எவை? சென்னை, கல்கத்தா, பம்பாய்.

9. எந்தக் காலகட்டத்தில் பிரித்தானியரும், பிரான்ஸியரும் போட்டி போடத் தொடங்கினார்கள்?
இந்தியாவில் மொகலாய ஆட்சி நிலை குலையத் தொடங்கியபோது.

10. மொகலாய சாம்ராஜ்யத்தை ஆண்டுவந்த மன்னன் யார்? அவன் எப்போது இறந்தான்? ஒளரங்கசீப், 1707-ல் இறந்தான்.

11. ஒளரங்கசீப் இறந்த பின்னர் ஆட்சி நடாத்தியது யார்?
சிவாஜி என்ற மராட்டியன்.

12. நவாப்பினால் ஆளப்பட்ட பகுதி எது?
கர்நாடகம், மைசூர், ஹைதராபாத்

13. பிரான்சிய சேனாதிபதி டுப்பிளே எப்போது இந்திய போர்வீரர்களைக் கொண்ட படையைத் திரட்டினார்? 1741-ல்.



Date

14. டுப்பிளே எப்போது நாட்டுக்கு திருப்பி அழைக்கப்பட்டான்? 1754-ல்.

15. புதுச்சேரி எப்போது பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது? 1761-ல்.

16. புதுச்சேரி மீண்டும் ஏன் எப்போது பிரான்சியரிடம் ஒப்படைக்கப்பட்டது?
1763-ல் பாரிஸ் உடன்படிக்கைப்படி.

17. இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் ஏற்பட்ட ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் எப்போது ஏற்பட்டது? 1744-ல்.

18. இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையில் ஏற்பட்ட ஏழாண்டுப் போர் எப்போது தொடங்கியது? 1756-ல்.

19. இந்தியாவில் பிரித்தானியர் பிரான்சியரை வெற்றிகொள்ளக் காரணமாக இருந்தது எது? பொருளாதார பலமும், கடற்படைப்பலமும்.

20. பிரித்தானியர் இந்தியாவை எதுவரை ஆண்டனர்? 1947-ம் ஆண்டுவரை

21 உலகில் உள்ள சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் இலங்கையில் உள்ளது எது? திருகோணமலைத் துறைமுகம்.

22. திருகோணமலைத் துறைமுகத்தில் காணப்படும் சிறப்பம்சங்கள் எவை?
1. இரண்டு பருவக் காற்றுக்களினதும ஆதிக்கத்திற்குள் அகப்படாது இருத்தல்
2. ஒரே நேரத்தில் பல கப்பல்கள் தரித்து நிற்கக் கூடிய வசதி இருத்தல்
3. துறைமுகத்தில் நிற்கும் கப்பல்கள் எதிரிகளின் பார்வைக்கு தெரியாதிருத்தல்.

23. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியால் திருகோணமலைத் துறைமுகம் டச்சுக்காரரிடம் இருந்து எப்போது கைப்பற்றப்பட்டது?
1782 ஜனவரியில் சேர் எட்வேட் ஹியூஸ் என்ற கடற்படைத் தலைவனால்

24. எந்த நாட்டின் தலையீட்டினால் மீண்டும் இத்துறைமுகம் டச்சுக்காரர் வசமானது? பிரான்சியரின் தலையீட்டினால்.

25. ஒல்லாந்து எப்போது பிரான்சியரின் ஆதிக்கத்திற்குள்ளானது? 1795-ல்

26. பிரான்சியப் புரட்சியின்போது ஒல்லாந்து அரசன் "ஸ்ராத் ஹோல்டர்" எந்த நாட்டில் சரணடைந்தான்? பிரித்தானியாவில்.

27. "ஸ்ராத் ஹோல்டர்" பிரித்தானியாவில் சரணடைந்ததால் ஏற்பட்ட விளைவு என்ன?
1. பிரித்தானியா பிரான்சிற்கும், ஒல்லாந்திற்கும் எதிராகப் போரைப் பிரகடனம் செய்தது,
2. இலங்கையில் இருந்த ஒல்லாந்தர் கோட்டைகளை பிரான்சியரிடமிருந்து பாதுகாக்க பிரித்தானியர் அங்கு செல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

3, இதன் விளைவாக ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இருந்த இலங்கையின் கரையோரப் பகுதிகளில் தாக்குதல்கள் இடம்பெற்றன.

28, திருகோணமலை எப்போது பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது?
1795-ம் ஆண்டு ஆவணிமாதம் 26-ந் திகதி

29, இலங்கையின் ஏனைய கரையோரப் பிரதேசங்கள் எப்போது பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது?

| | | | | |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | — 1795ம் ஆண்டு | புரட்டாதி | மாதம் | 15ம் திகதி |
| பருத்தித்துறை | 1795ம் ஆண்டு | புரட்டாதி | மாதம் | 24ம் திகதி |
| யாழ்ப்பாணம் | 1795ம் ஆண்டு | புரட்டாதி | மாதம் | 25ம் திகதி |
| முல்லைத்தீவு | 1795ம் ஆண்டு | ஐப்பசி | மாதம் | 1ம் திகதி |
| மன்னார் | — 1795ம் ஆண்டு | ஐப்பசி | மாதம் | 5ம் திகதி |
| கற்பிட்டி | 1795ம் ஆண்டு | கார்த்திகை | மாதம் | 13ம் திகதி |
| நீர்கொழும்பு | 1796ம் ஆண்டு | மாசி | மாதம் | 3ம் திகதி |
| கொழும்பு | 1796ம் ஆண்டு | மாசி | மாதம் | 16ம் திகதி |

30. பிரித்தானியர் இலங்கைக் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கான பொருளுதவியைச் செய்தது யார்? எவ்வளவு கொடுத்தது?
பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி -12000 பவுண்

31. கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி நிதியுதவி வழங்கியதால் ஏற்பட்ட விளைவு என்ன?
கரையோரப் பகுதியை கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனி ஆட்சி செலுத்தியது

32, ஏனைய பிரதேசங்கள் யாரால் ஆட்சி செய்யப்பட்டது?
பிரித்தானிய அரசினால்

33, பிரித்தானிய அரசினால் இலங்கைக்கு நியமிக்கப்பட்ட முதலாவது ஆளுநர் யார்? பிரடறிக் நோத் 1798—1805

34. கரையோரப் பிரதேசம் வர்த்தகக் கம்பனியாலும் ஏனைய பிரதேசங்கள் பிரித்தானிய அரசினாலும் ஆளப்பட்டது எவ்வாறு அழைக்கப்பட்டது?
இலங்கையில் இரட்டை ஆட்சி என அழைக்கப்பட்டது.

35. கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் இருந்த அதிகாரங்கள் எவை?
இறைவரியும், வர்த்தகமும்.

36. பிரித்தானிய அரசினால் நிர்வகிக்கப்பட்ட அதிகாரங்கள் எவை?
நிருவாகமும், நீதி பரிபாலனமும்.

37. இரட்டை ஆட்சிமுறை இருந்த காலப்பகுதி எது? 1798 — 1802வரை.

38 இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய நாடாக எப்போது பிரகடனப் படுத்தப்பட்டது? 1802-ல்

39, பிரித்தானியரின் கிழக்கிந்திய சங்கம் எப்போது நிறுத்தப்பட்டது?
1600ம் ஆண்டளவில்,



40, இச்சங்கத்திற்குரிய உரிமைகள் யாரால் வழங்கப்பட்டது?
எலிசபெத் ராணியால்

41. எக்காலங்களில் இச்சங்கத்திற்கு எதிர் சங்கங்கள் தாபிக்கப்பட்டன?
முதலாவது சாள்ஸ் காலத்திலும், மூன்றாவது வில்லியம் காலத்திலும்

42. 1708-ல் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் எது?
''கிழக்கிந்திய தீவுகளில் வியாபாரம் செய்யும் ஆங்கிலேய வியாபாரிகள் ஐக்கிய சங்கம்''

43 மேற்படி சங்கம் வேறு எவ்வாறு அழைக்கப்பட்டது? 'ஜோன் சங்கம்' என

44. பிரித்தானிய கிழக்கிந்திய சங்கம் எப்போது கலைக்கப்பட்டது? 1858-ல்

45. பிரெஞ்சு கிழக்கிந்திய சங்கம் எப்போது தாபிக்கப்பட்டது? 1664-ல்

46. பிரித்தானிய கிழக்கிந்திய சங்கம் எவ்வளவு முதலுடன் ஆரம்பமானது?
30,000 பவுணுடன்.

47. பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனிக்கு எதிராக இலங்கை மக்கள் எப்போது கிளர்ந்தெழுந்தனர்? 1797 யூன்

48. இக்கலகத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது எது?
1796 புரட்டாதி முதலாம் திகதி விதித்த தென்னைமர வரியாகும்

49. தென்னை மரமொன்றிற்கு விதித்த வரி எவ்வளவு? ஒரு வெள்ளிப்பணம்

50. தென்னைமர வரியால் ஏற்பட்ட கலகம் எப்போது ஏற்பட்டது?
1797 யூன் மாதம்

51, மேற்படி கலகம் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்டவர்கள் யார்? ஜெனரல் த மியூரன், மேயர் அக்னியூ, றொபேட் அன்ரூஸ்

52. விசாரணைக் குழுவினால் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன?
1. தென்னைவரி நீக்கப்பட்டது
2 தென்னை வரிசேகரிக்கும் முறை நீக்கப்பட்டு பழைய சிங்கள முறை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது
3 சென்னை அலுவலகளுக்குப் பதிலாக பழைய முதலியார்களை நியமித்தல்
4 ஒல்லாந்தரின் லான்றாட் நீதிமன்றங்கள் மீண்டும் ஏற்படுத்தல்

53. பிரடறிக் நோத் எப்போ பதவி ஏற்றார்? 1798 ஐப்பசி 12-ல்

54, எந்த ஆளுநர் காலத்தில் நீதி நிர்வாகம் இலங்கையில் சீரமைக்கப்பட்டது? பிரடறிக் நோத் காலத்தில்

55, கிறிமினல் நீதிமன்று எப்போ ஆரம்பிக்கப்பட்டது? 1799-ல்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

56. பிஸ்கால் நீதிமன்று எப்போ ஆரம்பிக்கப்பட்டது? 1800-ல்

57. உயர் நீதிமன்று எப்போ ஆரம்பிக்கப்பட்டது? 1801-ல்

58. நோத் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஏனைய துறைகள் எவை?
1. நில அளவைப்பகுதி 2. காணிப் பதிவு 3. வைத்தியப்பகுதி
4. தபால்பகுதி 5 கல்விப்பகுதி 6. கணக்குப் பரிசோதனை

59. அம்மைப் பால் கட்டும் முறை எப்போ ஏற்பட்டது? 1802-ல்

60. நோத்திற்கு உதவியாக அமைக்கப்பட்ட சபையில் அங்கம் வகித்தவர்கள் யார்?
1. அரசாங்க தலைமைக் காரியதரிசி 2. வர்த்தக இலாகாவின் அதிபதி
3. நிதிக்கணக்கு இலாகா தலைவர், நிதிப் பரிசீலனையாளர்

61. வர்த்தகத்தையும், நிலவரியையும் கண்காணிக்க அமைக்கப்பட்ட சபை எது? வர்த்தக நிலவரிச் சபை

62. அரசாங்க வர்த்தமானி [ கெசற் ] முறை யார் காலத்தில் கொண்டுவரப்பட்டது? நோத் காலத்தில்.

63. நோத் இராசகாரிய முறையை ஒழிக்கவேண்டுமென நினைத்த காரணங்கள் எவை?
1. மானிய முறையால் தலைமைக்காரர், முதலியார்கள், விதானைமார் மக்களை வருத்துவதைக் குறைத்தல்,
2. அவ்வுத்தியோகத்தர்களின் செல்வாக்கைக் குறைத்தல்,
3. நிலம் குடியானவர்களுக்கு கொடுத்தால், தானியஉற்பத்தி பெருகும் அதன்மூலம் அரசிறை வருவாய் அதிகரிக்கும்.

64. நோத் எப்போ இராசகாரிய முறை ஒழிப்பு பிரகடனம் கொண்டு வந்தார்? 1800 மே 3-ம் நாள்

65. நோத்தைத் தொடர்ந்து இங்கு ஆளுனராக பதவி வகித்தது யார்?
சேர் தோமஸ் மெயிற்லந்து [ 19-7-1805 -11-7-1811 ]

66. ஜூரிமார் விசாரணை முறை இலங்கையில் யாரால் எப்போது ஏற்படுத்தப்பட்டது? 1810-ல் தோமஸ் மெயிற்லந்தினால்.

67. பிரதேச நீதிமன்றங்கள் யார் காலத்தில் நிறுவப்பட்டன?
தோமஸ் மெயிற்லாந்து காலத்தில்,

68. முஸ்லீம்களின் சட்டங்கள் யார் காலத்தில் யாரால் எழுதப்பட்டது?
தோமஸ் காலத்தில் பிரதம நீதிபதி ஜோன்ஸ்ரனால்

69. இலங்கை நிர்வாகம் பற்றி பிரதம நீதிபதி சேர் அலெக்ஸாந்தர் ஜோன்ஸ்ரன் கூறிய கருத்து என்ன?
1. இலங்கை நிர்வாகத்திற்கு பிரதேச வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சபை அவசியம்,
2. இலங்கையர்களை சிவில் அதிகாரியாக நியமிக்க வேண்டும்,
3. அடிமை முறை ஒழிக்கப்பட வேண்டும்.



70. தோமஸ் மெயிற்லந்து கொண்டுவந்த சீர்திருத்தங்களில் முதன்மை பெற்றிருந்தவை எவை?
1. சிவில் சேவை உத்தியோகத்தர்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதை 1805-ல் தடைசெய்தார்
2. மேற்படி உத்தியோகத்தரின் சேவைக் காலத்தை 12 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகளாக மாற்றினார்
3. மேற்படி உத்தியோகத்தர்களில் திறமைசாலிகளை 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு சேவை நீடிக்க அதிகாரம் பெற்றார்,

71. மெயிற்லந்து குடியியற் சேவையை எத்தனை வகுப்புகளாக வகுத்தார்?
3 வகுப்புகளாக

72. தோமஸ் மெயிற்லந்தைத் தொடர்ந்து ஆளுனராக வந்தது யார் எப்போது? றொபேட் பிறவுண்றிக் 1812 மார்ச் 11ம் திகதி 1822

73. கண்டியில் நாயக்க மன்னராட்சியை ஒழித்து மீண்டும் சிங்களஅரசை தோற்றுவிக்க சூழ்ச்சி செய்தது யார்? பிலிமத்தலாவை

74. கண்டி மீது படையெடுத்தபோது பிறவுண்றிக் மக்களுக்கு என்ன அறிவித்தான்?
கண்டி மக்களை அரசனின் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பதற்காகவும், பிரித்தானியரின் மானத்தைக் காப்பதற்காகவுமே இப்போர் என அறிவித்தான்.

75. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைக்காட்டிக் கொடுத்தது யார்?
எஹெலப்பொல

76. கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்ற விரும்பியதற்கான காரணிகள் எவை?
1. அங்கு விளைந்த வாசனைத்திரவியங்களின் ஏகபோக உரிமைகளை பெறுதல்.
2 எல்லைப்புறங்களில் விதிக்கப்பட்ட தீர்வை வரிகளை இல்லாமல் செய்தல்,
3. அங்கு கடமையாற்றிய அதிகாரிகள் குருமார்களின் அதிகாரங்களைக் குறைத்தல்.
4. எல்லைப்புறங்களில் நிறுத்தப்படும் படையினருக்கான செலவைக் குறைத்தல்.

77. கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய போது 2-3-1815ல் செய்துகொண்ட ஒப்பந்தம் என்ன?
1. கண்டி அரசன் அரசுரிமையிழந்து கண்டி அரசு பிரித்தானியர் வசம் உள்ளது
2. பழைய முறைப்படியே தலைமைக்காரர், திசாவைகள் பிரதானிகள் தொடர்ந்தும் பதவி வகிப்பர்,

3. கண்டிச்சட்டமும், தேசவழமைச் சட்டமும் தொடர்ந்து பேணப்படுவதுடன் பௌத்தமதம், குருமார் சங்கம் தேவாலயங்கள் என்பனவும் பேணப்படும்

4 மரணதண்டனை வழங்கும் அதிகாரம் ஆளுனருக்கேயுண்டு

5 கண்டியின் வெளிநாட்டு வர்த்தக உரிமை ஆளபதியின் கீழ் இருக்கும்

79. பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றிய பின் எப்போ கலகம் ஏற்பட்டது?
1818-ல்

80. கண்டிக்கலகம் ஏற்படக் காரணமாயிருந்த காரணிகள் சில கூறுக?
1. ஏற்கனவேயிருந்த பிரதானிகள, அதிகாரிகளின் அதிகாரங்கள் குறைந்தமை,
2. பிரித்தானிய அதிகாரிகளின் கீழ் கட்டுப்பட்டு கடமைபுரிய விரும்பாமை
3. பிரித்தானியா பௌத்த மதத்திற்கு மதிப்புக் கொடுக்காமை,
4. சாதிமுறை ஒழிக்கப்பட்டமை,
5. கிறிஸ்தவ ஆட்சி என்பதால் குருமாரும், பௌத்த சங்கமும் வெறுத்தமை

81 பிரவுன்றிக்கைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட ஆளபதி யார்?
சேர் எட்வேட் பாண்ஸ்

82 இலங்கையில் பெருந்தெருக்களையும், பெருந்தோட்டங்களையும் அமைத்த ஆரம்ப கர்த்தா யார்? சேர் எட்பேட் பாண்ஸ்

83 1826-ல் இலங்கையின் நிர்வாக அமைப்பை விசாரணை செய்ய பிரித்தானிய அரசால் அனுப்பப்பட்டது யார்? கோல்புறூக்

84. 1830-ல் இலங்கையின் நீதி பரிபாலனம் பற்றி விசாரிக்க அனுப்பப்பட்டது யார்? கமறன்.

85. கோல்புறூக் செய்த சிபார்சுகள் எவை?
1. கீழ் பதவிகளுக்கு இலங்கையரை அமர்த்துவதோடு தகுதியானவரை உயர்பதவிக்கு நியமித்தல்,
2. மலைநாடு, யாழ்ப்பாணம், கரையோரம். என்ற மூன்று நிர்வாக அலகுகளையும் இணைத்து ஒரே ஆட்சி ஏற்படுத்தல்,
3 பதினேழு பிரிவுகளாக இருந்த பிரிவுகளைக் குறைத்து வடமாகாணம் கிழ்மாகாணம், தென்மாகாணம். மேல்மாகாணம், மத்தியமாகாணம் எனக்குறைத்தல்
4. சுதேசக் கல்வியை அகற்றி ஆங்கிலக் கல்வியை புகுத்தல்.
5. இராசகாரிய முறை ஒழிக்கப்படல்.
6. ஆளுநருக்கு உதவியாக 15 அங்கத்தவர்கள் கொண்ட சட்டவாக்கக் கழகம் தெரிதல்
7. அரசின் வர்த்தக ஏகபோக உரிமைகளைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதி விதிக்கப்பட்டதுடன் தனியார் ஈடுபட ஊக்குவித்தல்.



86. சட்டவாக்க கழகமும், சட்ட நிருவாகக் கழகமும் எப்போது ஏற்பட்டது?
1833- ல்.

87. 1833- ல் சட்டவாக்க கழகத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தனர்?
15 பேர் ( உத்தியோக சார்பு - 9, உத்தியோக சார்பற்றோர் - 6 )

88. உத்தியோக சார்பின்றித் தெரிவு செய்யப்பட்டோர் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்?
3 ஐரோப்பியர், 1 சிங்களவர், 1 தமிழர், 1 பறங்கியர்.

89. கோல்புறூக் காலத்தில் ஆள்பதியாக இருந்தது யார்?
ஹோறிங்டன் பிரபு.

90. 1848 – ல் கலகம் ஏற்பட காரணமாயிருந்தது எவை?
1. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக மக்களிடமிருந்து நிலங்கள் பறித்தெடுக்கப்பட்டமை.
2. தரிசு நிலச்சட்டம், 3. நாய்வரி, துப்பாக்கிவரி, தலைவரி, கடைவரி உப்புவரி, படகுவரி, வீதிவரி போன்ற வரிகள விதித்தமை
3. 18 - 55 வயதுக்குட்பட்ட ஆண்கள் கட்டாயமாக ஆறு நாட்கள் பொது வீதிகளில் வேலை செய்ய வேண்டும் என்ற உத்தரவு

91. மாத்தளையிலும், தம்புள்ளையிலும் தோன்றிய கலகத்திற்கு தலைமை தாங்கியவர்கள் யார்?
புரன் அப்புவும், கொங்கலகொட பண்டாவும்.

92. மாத்தளைக் கலகக்காரர்கள் யாரை கண்டி அரசனாக பிரகடனம் செய்தனர்? புரன் அப்புவை,

93. தம்புள்ளை கலகக்காரர்கள் யாரை கண்டி அரசனாக பிரகடனம் செய்தனர்? கொங்கலகொட பண்டாவை.

94. டொறிங்டன் பிரபுவை தொடர்ந்து வந்த ஆள்பதி யார்?
அண்டர்சன்

95. 1910ல் சட்டவாக்க கழகத்தின் அங்கத்தவர் எத்தனை பேர்? 21 பேர்
[உத்தியோக சார்பானவர்கள் 11, உத்தியோக சார்பற்றவர்கள்-10]

96. 1910-ல் ஆளுனராக இருந்தது யார்? மக்கலம்.

97. 1921ல் சட்டவாக்கக் குழுவில் எத்தனை அங்கத்தவர்கள் இருந்தனர்?
37 பேர் (உத்தியோக சார்பானவர்கள் - 14பேர் உத்தியோக சார்பற்றவர்கள் – 23 பேர்)

98. 1924ல் சட்டவாக்க கழகத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தனர்?
49 பேர்

| | |
|---|---|
| உத்தியோக சார்பானவர்கள்<br>உத்தியோக சார்பற்றவர்கள் | - 12 பேர் |
| 1. பிரதேச வாரியாக தெரிவு செய்யப்பட்டோர் | - 23 பேர் |
| 2. இனவாரியாக தெரிவு செய்யப்பட்டோர் | - 06 பேர் |
| 3. ஆளுனரால் நியமிக்கப்பட்டோர் | - 08 பேர் |
| மொத்தம். | 49 பேர் |

99. டொனமூர் அரசியலமைப்பு இலங்கையில் இருந்த காலம் எது?
1931- 1947.

100 அரசுக் கழகத்தில் 15 வருடங்கள் சபாநாயகராக இருந்தவர் யார்?
சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி.

101 1931-ல் சட்டவாக்க குழுவில் எத்தனை பேர் அங்கம் வகித்தனர்?

| | |
|---|---|
| பிரதேசவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்டோர் | - 50 பேர் |
| நியமன உறுப்பினர்கள் | - 8 பேர் |
| பிரதம, நிதி, சட்ட செயலாளர்கள் | - 3 பேர் |
| | 61 பேர் |

102 டொனமூர் பிரபுவின் தலைமையில் வந்த குழு எப்போது இலங்கை வந்தது? 1927 - ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 -ம் நாள்.

103. எந்த வயதினர்க்கு வாக்குரிமையளிக்க டொனமூர் குழு சிபார்சு செய்தது
21 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும்.

104. டொனமூர் குழுவின் சிபார்சுப்படி பிரிக்கப்பட்ட ஏழு நிர்வாகக் குழுக்களும் எவை?
1. உள்நாட்டு அலுவல்கள், 2. பயிர்ச் செய்கை,
3. உள்ளூர் பாலனம், 4. சுகாதாரம்,
5. கல்வி, 6. பொது வேலைகள்,
7. போக்குவரத்து.

105 டொனமூர் குழுவின் சிபார்சின்படி நடைபெற்ற முதலாவது தேர்தல் எப்போது நடைபெற்றது? - 1931-ம் ஆண்டு யூன்மாதம் 23ந்திகதி

106. இரண்டாவது அரசுக் கழகத்திற்கான தேர்தல் எப்போது நடைபெற்றது?
1936- மாசி 10-ம் திகதி

107. டொனமூர் அரசியல் திட்டத்தில் காணப்பட்ட சில குறைபாடுகள் கூறுக?
1. தனிப்பட்ட உறுப்பினர்கள் தமது அதிகாரத்தை அளவுக்கு அதிகமாக பயன்படுத்த இடமளித்தமை,
2. கூட்டுப் பொறுப்புள்ள நிர்வாகக் '' குழுக்கள் '' (அமைச்சரவை) இயங்காமை,
3. அதிகாரிகளின் இடையூறுகள்,
4. கொள்கையடிப்படையிலான அரசியற் கட்சி முறை தடைப்பட்டமை,
5. ஆள்பதிக்கு வழங்கப்பட்ட அதிகபட்ச அதிகாரங்கள்.

108. சிறுபான்மையினத்தவரின் ஐம்பதிற்கு ஐம்பது கோரிக்கைக்கு பதிலாக ஆள்பதி கல்டிகொற் கூறியது என்ன?
சிறுபான்மைப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை கூட்டும் வகையில் தேர்தல் பிரிவுகள் அமைக்கப்படவேண்டும் என்பதாகும்.

109. ஐரோப்பியரையும் பறங்கியரையும் பிரதிநிதித்துவப்படுத்த அவர் கூறிய வழியென்ன? 8 உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றார்

110 சீர்திருத்தம்பற்றி ஆலோசனை வழங்கும் அதிகாரம் அமைச்சர் சபைக்கு எப்போது வழங்கபட்டது? 1943-ல்

111 சோல்பரிப்பிரபு தலைமையிலான ஆணைக்குழு எப்போது வந்தது?
1944-ல்

112 சோல்பரிக் குழுவின் விதப்புரைகள் எவை?
1. அரசுக் கழகத்திற்கு பதிலாக பாராளுமன்றம் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும்
2. இது பிரதிநிதிகள் சபை, செனற் சபை என இரண்டாக இயங்கும்
3. பிரித்தானிய அரசின் பிரதிநிதி ஒருவர் ஆளுனர் நாயகமாக இருப்பார்
4. ஒரு சட்டம் இரண்டு சபைகளினாலும் அங்கீகரிக்கப்பட்டு ஆளுனரின் அங்கீகாரம் பெற்றபின்பே நடைமுறைப்படுத்தப்படும்.

113. பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையில் எத்தனை பேர் அங்கம் வகிப்பர்?
95 பேர் பிரதேசவாரியாகவும் 6 பேர் ஆளுனர் நாயகத்தினாலும் நியமிக்கப்பட்டு மொத்தம் 101 பேர்.

114. பிரதிநிதிகள் சபையின் பதவிக்காலம் எவ்வளவு?
5 வருடங்கள்

115 எந்த அடிப்படையில் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தது?
1000 சதுர மைலும், 75000 மக்கள் கொண்ட பிரதேசமும் ஒரு தொகுதியாகும்.

116 மொழியால், மதத்தால் மாறுபட்ட மக்கள் கூடுதலாக வாழ்ந்த தொகுதி எவ்வாறு கருதப்படும்? பல அங்கத்தவர் தொகுதி

117. செனற்சபையில் எத்தனை பேர் அங்கம் வகித்தனர்?
பிரதிநிதிகள் சபையால் 15 பேரும் ஆளுநர் நாயகத்தினால் 15 பேருமாக மொத்தம் 30 பேர்

118. செனட் உறுப்பினர்களின் பதவிக்காலம் எவ்வளவு?
நியமனப் பிரதிநிதிகளில் ஐவரும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் ஐவருமாக மொத்தம் 10 பேர் வீதம் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை விலகுவர் இந்த வெற்றிடங்கள் தெரிவு அல்லது நியமனம் மூலம் நிரப்பப்படும் இருந்தவர்களும் திரும்பவும் வரலாம.

119. சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் 1947-ல் நடைபெற்ற தேர்தலினால் யார் பிரதம மந்திரியானார்?
டீ. எஸ். சேனநாயக்கா.

120. முதலாவது பாராளுமன்றம் எப்போ கூடியது? 25-10-1947-ல்

121. இலங்கையில் கூடதேவை விவசாயம் வீழ்ச்சியுறக் காரணமாயிருந்தது எது?
ஐரோப்பியர் இலங்கையில் நடாத்திய போர், பொருளாதாரக் கொள்கை சிறிய விவசாய நிலங்கள் பெருந்தோட்டங்களாக மாறியமை

122. கோப்பிக்கு பதிலாக பயிரிடப்பட்ட மாற்றுப் பயிர் என்ன?
சிங்கோனா.

123. தேயிலைத்தோட்ட வளர்ச்சியால் ஆரம்பிக்கப்பட்ட தாபனங்கள் எவை?
1925-ல் தேயிலை ஆராய்ச்சிக் கழகம், பின்னர் தேயிலை பிரசார சபை

124. முதல் கோப்பித் தோட்டம் எங்கே எப்போது யாரால் திறக்கப்பட்டது?
கம்பளையில் 1832-ல் ஜோர்ஜ்பேர்ட் என்பவரால் திறக்கப்பட்டது

125. சிங்கோனாப் பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து என்ன?
குயினைன்.

126. சிங்கோனா வீழ்ச்சியடைந்த போது மேற் கொண்ட மாற்றுப் பயிர் எது?
தேயிலை.

127. பிரித்தானியர் காலத்தில் ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தை வகித்தது எது? இறப்பர்

128. இறப்பர் எங்கே, எப்போது முதலில் நாட்டப்பட்டது?
பேராதனையில். 1876-ல்

129. தரிசு நிலச் சட்டம் எப்போது கொண்டுவரப்பட்டது? 1897-ல்

130. இச்சட்டம் ஏன் கொண்டுவரப்பட்டது?
1. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை காரணமாக காணி இழந்தவர்களுக்காகவும், காணியற்றவர்களுக்காகவும் அரச காணிகளை அடாத்தாக பிடிப்பதைத் தடுப்பதற்காகவும்.
2. பெருந்தோட்டப் பயிர் செய்கையை மேலும் விருத்தி செய்வதற்காகவும்.



131. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் வேலைசெய்ய எங்கிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டனர்?
தென்னிந்தியாவிலிருந்து [இன்றைய மலையகத் தமிழர்கள்]

132. கண்டிக்கும் கொழும்பிற்கும் இடையிலான வீதி எப்போது போடப்பட்டது? 1820-ல் தொடங்கி 1825-ல் முடிவுற்றது.

133. இலங்கையில் புகையிரதப் பாதைபோடும் வேலை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
பிரித்தானிய கம்பனி ஒன்றினால் 1858-ல் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கண்டிக்கும் கொழும்பிற்குமிடையிலான ஒப்பந்த முரண்பாடு காரணமாக நிறுத்தப்பட்டு பின்னர் 1867-ல் முடிவுற்றது

134. இலங்கையிலிருந்து காங்கேசன்துறைக்கு எப்போது புகையிரதப் பாதை போடப்பட்டது?
1902-ல் தொடங்கி 1905-ல் முடிவுற்றது [ஆளுனர் றிஜ்வே காலத்தில்]

135 தபால் சேவை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1832-ல் குதிரைவண்டிகள் மூலம்.

136. தொலைபேசிச் சேவை எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1880-ல்

137. இலங்கை வானொலிச் சேவை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1924-ல்

138. பொதுசன விமான சேவை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1947-ல்

139. இலங்கையில் பாடசாலைகளை அமைத்த கிறிஸ்தவ தாபனங்களும் ஆண்டுகளும் எவை?
1. கத்தோலிக்க திருச்சபை — 1812-ல்
2. வெஸ்லியன் மிசன் — 1814-ல்
3. இலங்கை அமெரிக்கன் மிசன் — 1816-ல்
4. அங்கிலிக்கன் திருச்சபை — 1817-ல்

140 றோயல் கல்விக் கழகம் [றோயல் கல்லூரி] எப்போது நிறுவப்பட்டது?
1836-ல்

141. வைத்திய கல்லூரி எப்போது தாபிக்கப்பட்டது? 1870-ல்

142. சட்டக் கல்லூரி எப்போது தாபிக்கப்பட்டது? 1873-ல்

143. பல்கலைக் கழக கல்லூரி எப்போது தாபிக்கப்பட்டது? 1921-ல்

144. பௌத்தத்திற்கு புத்துயிர் கொடுக்க வழிவகுத்தவர் யார்?
வலிவிற்ற சரணங்கரதேரர்.

145. சைவத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

146. இஸ்லாமிய விழிப்புணர்ச்சியைத் தட்டிக் கொடுத்தவர் யார்?
ஜனாப் எம் சி சித்திலெப்பை

147. சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் எத்தனையாம் ஆண்டு இனக்கலவரம் ஏற்பட்டது? 1915-ல்

148. இலங்கையில் முதல் தோன்றிய அரசியல் கட்சி எது?
இலங்கைத் தேசிய கழகம்.

149. இலங்கையின் இன ஒற்றுமையை சீர்குலைக்க வித்திட்டது எது?
1956-ல் எஸ். டபிள்யூ. ஆர் டீ. பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம்.

## 2. மனித உரிமைகளை வென்றெடுத்தல்.

1. மனித உரிமைகள் என்றால் என்ன?
சமுதாயத்தில் வாழும் அனைவரும் மற்றவர்களின் தகாத செல்வாக்கிற்கு உட்படாமல் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையே மனித உரிமைகள் எனப்படும்.

2. மனித உரிமைகள் பிரகடனத்தைத் தயாரித்த தாபனம் எது?
ஐக்கிய நாடுகள் அமையம்,

3. இலங்கையின் எந்த யாப்பில் மனித உரிமைகள் முதன் முதலாக சேர்க்கப்பட்டன?
1972-ல் ஏற்பட்ட முதலாவது குடியரசு யாப்பில்

4. மனித உரிமைகள் பொதுவாக எந்த அம்சங்களையுடையது?
சட்டரீதியான மனித உரிமைகள், அறநெறியிலான மனித உரிமைகள் நடைமுறையிலான மனித உரிமைகள்.

5. சட்டரீதியான மனித உரிமைகள் எத்தன்மையது?
நாட்டின் சட்டத்தோடு ஒட்டியதாக இருக்கும்

6. அறநெறியிலான மனித உரிமைகள் எத்தன்மையது?
தர்மம், அதர்மம் எது என்ற உணர்தலுடன் தொடர்பானது.



7. நடைமுறையிலான மனித உரிமைகள் எத்தன்மையது?
யதார்த்தமான நடைமுறையில் உள்ளது

8. மனிதன் தனது சுதந்திரத்திற்காகவும், உரிமைக்காகவும் நடாத்திய போராட்டங்களில் முக்கிய திருப்பு முனையாக விளங்கியது எது?
இங்கிலாந்தை ஆட்சி செய்த ஜோன் மன்னனுக்கும் அந்நாட்டுப் பிரபுக்களுக்குமிடையே 1215-ல் செய்து கொள்ளப்பட்ட "மகனா கார்ட்டா" உடன்படிக்கை.

9. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக கொண்டுவரப்பட்ட ஏனைய சட்டங்கள் எவை?
1579-ல் கொண்டுவரப்பட்ட "ஹேபியஸ் கோப்பஸ்" சட்டம் 1689-ல் நிறைவேற்றப்பட்ட விண்ணப்ப உரிமைச் சாசனம்" என்ற சட்டம்,

10. நீதிவான் முன்நிலையில் கொண்டுசெல்லாமல் ஒருவரைத் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் முறை எதன் மூலம் ஒழிக்கப்பட்டது?
"ஹேபியஸ் கோப்பஸ்" சட்டத்தின் மூலம்,

11. மனித சுதந்திரத்திற்காகவும் உரிமைக்காகவும் ஏற்பட்ட ஏனைய புரட்சிகள் எவை?
அமெரிக்கப் புரட்சி, பிரான்சியப் புரட்சி ரஷ்யப் புரட்சி, சீனப்புரட்சி,

12. இங்கிலாந்தில் பாராளுமன்றத் தலைமை எப்போது முதன்மை பெற்றது
1688-ல் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம்.

13. 1688-ற்குப் பின்னர் இங்கிலாந்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட சட்டங்கள் எவை?
1 உரிமைமூறி [1689-ல்] 2. இணக்கவிதி [1710-ல்]

14. இங்கிலாந்தில் ஜேம்ஸ் மன்னனுக்கு எதிராக ஏற்பட்ட புரட்சி எவ்வாறு அழைக்கப்பட்டது? உன்னத புரட்சி என.

15. இங்கிலாந்தின் புரட்சிக்கு வழிவகுத்த நூலாசிரியர் யார்?
ஜோன் லொக்,

16 அமெரிக்கப் புரட்சி எப்போது ஏற்பட்டது? 1776-ல்

17. அமெரிக்கப் புரட்சிக்கு காரணமாயிருந்தது எவை?
1. யாப்பு தொடர்பான பிணக்கு 2. பேரரசு நடவடிக்கைகள்
3. இங்கிலாந்தில் இயற்றப்பட்ட வர்த்தகக் கட்டுப்பாடுகள், முத்திரைச் சட்டத்தின் படியான புதிய வரிகள் என்பன.

18. பொஸ்டன் தேயிலைக் கிளர்ச்சி என்றால் என்ன?
அமெரிக்காவின் தேயிலை விற்பனை செய்யும் ஏகபோக உரிமைகளை பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கு வழங்குவதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டபோது ஏற்பட்ட கிளர்ச்சியாகும்

19. பொஸ்டன் படுகொலை என அழைக்கப்பட்டது எதை?
பொஸ்டன் தேயிலைக் கிளர்ச்சியின் போது கலகக்காரர்கள் கொல்லப்பட்டதை.

20. பொஸ்டன் தேனீர் விருந்து என அழைக்கப்பட்டது எதை?
1773-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ந் திகதியன்று பொஸ்டன் துறைமுகத்தில் நின்ற கப்பலில் இருந்த 359 தேயிலைப் பெட்டிகளை அமெரிக்கர்கள் கடலில் வீசியமையை

21. அமெரிக்காவில் 13 குடியேற்ற நாட்டு பிரதிநிதிகளும் சேர்ந்து சுதந்திரப் பிரகடனம் செய்தது எப்போது? எங்கே?
பிலடெல்பியா நகரில் 1776 - ம் ஆண்டு யூலை மாதம் 4 - ம் திகதி

22. பிலடெல்பியா சுதந்திரப் பிரகடனத்தில் கூறப்பட்ட வாசகம் எது?
மனிதர்கள் எல்லோரும் சுதந்திரமாகவே படைக்கப்பட்டுள்ளார்கள் என்ற உண்மையை யதார்த்தங்களாக ஏற்றுக் கொள்கிறோம்.

23. பிரித்தானியருக்கும், அமெரிக்கருக்கும் முதல் யுத்தம் எங்கே எப்போது ஏற்பட்டது?
1775 - ல் இலச்சிங்ரன் என்ற இடத்தில்

24. வட அமெரிக்காவில் இருந்த 13-குடியேற்ற நாடுகளும் எவை?
1. மெயின், 2. நியூஹம்சயர், 3. கொனெக்ரிகட்,
4. றோட் தீவு, 5. மசசூசெற்ஸ், 6. நியூஜேர்சி,
7. நியூயோர்க், 8. டிலவாறே, 9. மேரிலாந்து,
10. வேர்ஜினியா, 11. கரோலினா, 12. ஜோர்ஜியா,
13. பென்சில் வேனியா.

25. 1776 - ல் பிரகடனப்படுத்திய சுதந்திரம் எப்போ கிடைத்தது?
1783 - ல் ஏற்பட்ட பாரிஸ் உடன் படிக்கைப்படி,

26. பிரித்தானிய சாம்ராச்சியத்திலிருந்து முதலில் சுதந்திரம் பெற்ற நாடுகள் எவை? அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

27. " ஒலிவ் கிளைவ் விண்ணப்பம் " என்றால் என்ன?
மசசூசெட்ஸ் என்ற மாகாணத்தில் மூன்றாம் ஜோர்ஜ் மன்னர் இராணுவ ஆட்சியை ஏற்படுத்திய போது அமெரிக்க மக்கள் அனுப்பிய சமாதான விண்ணப்பம்.





28. அமெரிக்காவின் 13- குடியேற்ற நாடுகளினதும் ஐக்கியத்தை உண்டாக்கப் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்பட்டது யார்?
ஜோர்ஜ் வாஷிங்டன் ( முதலாது ஜனாதிபதியும் இவரே)

29. 16 - ம் லூயி எத்தனையாம் ஆண்டில் பிரான்சின் அரசனாக இருந்தான்?
1774 - ம் ஆண்டில்.

30. பிரான்ஸில் இருந்த அரசாங்கசபை எவ்வாறு அழைக்கப்பட்டது?
" ஸ்ரேற்ஸ் ஜெனரல் சபை " என.

31. " ஸ்ரேற்ஸ் ஜெனரல் சபை எவ்வளவு காலம் கூட்டப்படாமல் இருந்தது?
சுமார் 175 ஆண்டுகள் ( 1614 - 1789- வரை )

32. ஸ்ரேற்ஸ் ஜெனரல் சபை மீண்டும் எப்போது கூட்டப்பட்டது?
1789 -ம் ஆண்டு மே மாதம் 5 - ந் திகதி

33. பிரான்ஸிலிருந்த மக்களைத் தூண்டிவிட்ட சிந்தனையாளர்கள் யார்?
வோல்டேயர், ரூஸோ, மொண்டெஸ்கியூ ஆகியோர்.

34. ஐரோப்பா முழுவதையும் சிந்திக்க வைத்த ரூஸோ எழுதிய தலைசிறந்த அரசியல் நூல் எது?
" சமூக ஒப்பந்தம் " ( SOCIAL CONTRACT )

35. பிரான்ஸிய விவசாயிகள் அரசாங்கத்திற்கு செலுத்தியவரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
" டெயில் " " கபெல் " என.

36. பிரான்ஸில் வாழ்ந்த மக்களில் விவசாயிகள் எத்தனை வீதமாகும்?
80 வீதமாகும்.

37. பாரிஸ் நகரில் எப்போது கலகம் ஏற்பட்டது?
1789 - ம் ஆண்டு யூலை மாதம் 14 - ந் திகதி.

38. 1789 - ன் கலகத்தின் போது தாக்கப்பட்ட சிறைச்சாலை எது?
" பஸ்ரில் " சிறைச்சாலை.

39. பிரான்சியப் புரட்சிக்கு அடிப்படைக் காரணங்களாக இருந்தவை எவை?
சீரற்ற அரசியல் முறை, சமனற்றவரி விதிதங்கள், வகுப்பினரிடையே காணப்பட்ட விரோதங்கள், ஒழுங்கற்ற நீதிபரிபாலன முறை என்பன.

40. மூன்று வகுப்பினர் எனக்குறிப்பிட்டது யாது?
1. பிரபுக்கள், 2. குருமார்கள், 3. விவசாயிகள்

No.
Date:

41. மூன்றாம் வகுப்பினர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
''எஸ்ரெற்ஸ்'' என

42. ஒரு தேசம் சிந்திக்க தொடங்கி விடுமானால் அதன் வேகத்தை நிறுத்த ஒருவராலும் முடியாது எனக் கூறிய சிந்தனையாளர் யார்?
''வோல்டேயர்,,

43. ''மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான் ஆனால் அடிமைச் சங்கிலியால் கட்டுப்பட்டிருக்கிறான்'' எனக் கூறியது யார்? ''ரூஸோ''

44 மொன்ரெஸ்கியூ என்ற சிந்தனையாளர் வெளியிட்ட நூல் எது?
''சட்டங்களின் சாரம்''

45. பிரான்ஸின் புதிய யாப்பு எப்போ உருவாக்கப்பட்டது? 1791-ல்

46. 1791ல் குடியரசாக மாறிய பிரான்சை யார் ஆட்சி செய்தார்கள்?
யக்கோபின்கள் [தீவிரவாதிகள்]

47. ஆஸ்திரியாவிற்கும், பிரான்ஸிற்கும் எதிராக பிரான்ஸ் எப்போது யுத்தம் நடாத்தியது? 1792-ல்

48. பிரான்ஸில் இயக்குனர் சபை ஆட்சி எப்போது நடைபெற்றது?
1795-ல்

49. கான்சுலேட் சபை யாரால் நிறுவப்பட்டது?
நெப்போலியன் போனபாட்டால்

50. பிரான்ஸியப் புரட்சியின் போது எழுப்பப்பட்ட கோஷங்கள் எவை?
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

51. பிரான்ஸியப் புரட்சியால் ஏற்பட்ட ஏனைய மாற்றங்கள் சில கூறுக?
1. ஐரோப்பாவின் ஏனைய இடங்களில் இருந்த எதேச்சதிகார ஆட்சிகளுக்கு எதிராக புரட்சி ஏற்பட வித்தாக அமைதல்
2. உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் புதிய ஒழுங்கு, புதிய எண்ணம், புதிய சமுதாயம், உருவாகியது
3. மனித உரிமைகளுக்கு வித்திட்டது.

52. 1917ம் ஆண்டில் ரஷ்யாவில் பேரரசனாக இருந்தது யார்?
முதலாவது நிக்கலஸ் சார்

53. ரஷ்யாவில் ஏற்பட்ட கிளர்ச்சியினால் பேரரசன் நிக்கலஸ்சார் எப்போ பதவி திறந்தார்? 1917-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி



No.
Date:

54. 1917-ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஏற்பட்ட புரட்சியினால் பதவிக்கு வந்தது யார்? எப்போது?
1917 கார்த்திகை 6-ம் திகதி வீ. ஐ. லெனின் தலைமையிலான போல்ஷெவிக வாதிகள் இது ஒக்ரோபர் புரட்சி எனவும் அழைக்கப்பட்டது

55. சோவியத் சபையை பிரதிநிதிகளடங்கிய கொஸ்கிரஸ் சபையாக மாற்றியது யார்? லெனின்

56. செஞ்ஞாயிறு என அழைக்கப்பட்டது எதை?
1905ல் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து அரசமாளிகைநோக்கி ஊர்வலமாகச் சென்றபோது துப்பாக்கி பிரயோகம் மூலம் கலகம் அடக்கப்பட்டபோது பல அரச அதிகாரிகள் தொழிலாளரால் கொல்லப்பட்டது செஞ்ஞாயிறு என அழைக்கப்பட்டது

57. எத்தனையாம் ஆண்டில் யப்பானுடன் போர் செய்த போது ரஷ்யா தோற்கடிக்கப்பட்டது? 1904-ல

58. ரஷ்சியாவில் மக்களின் சிந்தனையை தூண்டக்கூடிய விதத்தில் நூல்களை வெளியிட்ட சிந்தனையாளர்கள் யார்?
1. நிகோ லோல் கோல் 2. லியோசரோல்ஸ்ரோய்
3. அன்ரன் செக்கோவ் 4. மாகஸிம் கோர்க்கி
5. தேர்கனேவ்

59. கால்மார்க்ஸ் வெளியிட்ட நூல் எது?
மூலதனம்

60. சோவியத் சமவுடமைக் குடியரசு எப்போது உருவாக்கப்பட்டது?
1923-ல்

# 3. கைத்தொழிற் புரட்சி

1. கைத்தொழிற் புரட்சி எனப்படுவது என்ன?
கைத்தொழிற்துறையிலும், விவசாயத் துறையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டதைக் குறிக்கும் ஒரு சொற்றொடராகும்.

2. கைத்தொழிற் புரட்சியினால் எத்துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன?
சமூக, பொருளாதார, கலாசாரத் துறைகளில்,

3. துரித கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட காலம் எது?
1760 - 1830

4. முதன் முதலில் கைத்தொழில் மயமாக்கப்பட்டநாடு எது?
இங்கிலாந்து

5. கைத்தொழிற் புரட்சியினால் கைத்தொழில் மயமாக்கப்பட்ட வேறு சில நாடுகள் கூறுக? பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மனி

6. சிலநாடுகள் இன்னும் கைத்தொழில் அபிவிருத்தி ஏற்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணியாகக் கருதப்படுவது எது?
ஐரோப்பாவின் குடியேற்ற நாடாக இருந்தமையால் மூலப்பொருட்களை வழங்கும் நாடாகவும், உற்பத்திப் பொருட்களை வாங்கும் நாடாகவும் இருந்தமை.

7. கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட விளைவு என்ன?
1. உற்பத்தியின் தரம் உயர்ந்தது.
2. உற்பத்திக்கான காலமும் செலவும் குறைந்தது.
3. உற்பத்தி அதிகரித்தது
4. பொருளாதார சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது;
5. மூலவளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டன

8. இங்கிலாந்தில் முதலில் கைத்தொழிற்புரட்சி ஏற்படக் காரணமாயிருந்த காரணிகள் எவை?
1. மூலதனம் மிதமிஞ்சிக் காணப்பட்டன.
2. நிலக்கரி தேவையான அளவு கிடைத்தமை
3. வசதியான கரையோரப் பிரதேசங்கள் காணப்பட்டமை.
4 குடியேற்ற நாடுகளில் சந்தைப்படுத்தும் வாய்ப்பு காணப்பட்டமை

9. விவசாயப் புரட்சியினால் ஏற்பட்ட தாக்கங்கள் எவை?
1. பெரிய பிரபுக்களும், முதலாளிமார்களும் இலாபமடைந்தனர்.
2. உழைப்பு மிக்க உழவர்கள் மறைந்தனர்.

10. கைத்தொழிற் புரட்சியினால் வளர்ச்சியடைந்த முக்கிய தொழில்கள் எவை? இரும்புக் கைத்தொழில், நிலக்கரிக் கைத்தொழில், புடவை கைத்தொழில்.

11. கைத்தொழிற் புரட்சியின் போது ஏற்பட்ட சில கண்டு பிடிப்புகளும் அதனைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நூல்நூற்கும் ஜெனி இயந்திரம் | — | ஜேம்ஸ் ஹாக்றிவிஸ் |
| 2. | நூணாழி | — | ஜோன்கே |
| 3. | நீர்ச் சட்டகம் | — | றிச்சாட் ஆக்றைட் |
| 4. | நீராவி இயந்திரம் | — | ஜேம்ஸ் வாட் |
| 5. | குளோறின் | — | சீல |
| 6. | சுட்ட கரிமூலம் இரும்பு உருக்குதல் | — | ஆபிரகாம் டாபி |
| 7. | புகைவண்டி | — | ஜோர்ஜ் ஸ்டீபன்சன் |
| 8. | வானொலி | — | மார்க்கோனி |
| 9. | ஆகாய விமானம் | — | றைட் சகோதரர்கள் |
| 10. | மோட்டார் இயந்திரம் | — | டெயிம்லர் |



# 4. குடியேற்ற வாதத்தின் ஆரம்பம், வளர்ச்சி வீழ்ச்சி

1. குடியேற்றங்கள் தோன்றக் காரணமாயிருந்த காரணிகள் எவை?
1, வர்த்தகப் பாதைகள் தடைப்பட்டமை, 2, கல்வி மறுமலர்ச்சி
3, ஐரோப்பிய மாலுமிகள் மேற்கொண்ட கடற் பயணங்கள்.
4, கீழைத்தேச நாடுகளின் நிலைமை.

2. புதிய நாடுகளை கண்டுபிடிப்பதில் ஈடுபட்டவர்கள் யார்? கொலம்பஸ், வாஸ்கொடகாம, மகலன்

3. முதலில் குடியேற்றங்களை ஏற்படுத்தியவர்கள் யார்? போர்த்துக்கேயர்.

4. குடியேற்ற வாதம் என்றால் என்ன?
ஒரு நாடு இன்னொரு நாட்டைக் கைப்பற்றி அங்கு தன்னுடைய நாட்டு மக்களைக் குடியேற்றி அந்நாட்டை நிர்வகித்து தமது அரசியல் சமூக பொருளாதார கலாசாரத்தை அந்நாடுகளில் மாற்றியமைத்தலை.

5. குடியேற்ற நாடுகளாக இருந்த கீழைத்தேச நாடுகள் சில கூறுக? இலங்கை, இந்தியா, பிலிப்பைன் தீவுகள், கிழக்கிந்தியதீவுகள்.

6. ஆபிரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த நாடுகள் எவை? பிரான்ஸ், பிரித்தானியா.

7. "இருண்ட கண்டம்" என வர்ணிக்கப்பட்டது எது? ஆபிரிக்கா கண்டம்.

8 போர்த்துக்கேயர் குடியேற்றங்கள் அமைத்த சில நாடுகள் கூறுக? இந்தியா, இலங்கை, பிலிப்பைன் தீவுகள், பிறேசில்.

9 பிரித்தானியர் குடியேற்றங்கள் அமைத்த நாடுகள் சில கூறுக? பகாமா தீவுகள் சேசல்தீவு, யமேக்கா, கயானா, கரோலினா, இலங்கை, எகிப்து, சூடான், உகண்டா, நைஜீரியா.

10. ஒல்லாந்தர் குடியேற்றங்கள் அமைத்த நாடுகள் சில கூறுக? இலங்கை, இந்தியா, கயானா, மேற்கிந்திய தீவுகள், ஹட்சன் பள்ளத்தாக்கு.

11. ஸ்பானியர் குடியேற்றங்களை அமைத்த நாடுகள் சில கூறுக? கியூபா, கொலம்பியா, மெக்சிக்கோ, பனாமா, பேரு, ஆஜென்டினா, சிலி, பொலிவியா, நிக்கரகுவா

12 பிரான்சின் குடியேற்றங்களாக இருந்த நாடுகள் சில கூறுக? கனடா, லூசியானா, மொறக்கோ, நைகர், சாட், மடகஸ்கர்.

13. குடியேற்றங்களை அமைக்க போட்டியிட்ட நாடுகள் எவை?
போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா, இத்தாலி, பிரான்ஸ்
ஸ்பெயின், பெல்ஜியம்

14. ஆபிரிக்க நாடுகள் எப்போது சுதந்திரமடைந்தன?
20-ம் நூற்றாண்டில்

15. இன்னும் சுதந்திரத்திற்காக போராடி வரும் நாடுகள் சில கூறுக?
கம்பியா, போட்ஸ்வானியா, அங்கோலா, சுவாசிலாந்து.
ஸ்பானிய சகாரா.

16. முதலாம் உலகப்போரில் இரண்டு அணிகளாக இருந்த நாடுகள் எவை?
1. ஜேர்மனி, ஆஸ்திரியா, துருக்கி பல்கேரியா, ஹங்கேரி, இத்தாலி.
2. பிரான்ஸ், சேர்பியா, பிரித்தானியா, ருஷ்யா, பெல்ஜியம்,
ருமேனியா, கிரேக்கம்.

17. முதலாம் உலகப் போர் நடைபெற்ற காலம் எது? 1914 1918

18. வேர்செயில்ஸ் ஒப்பந்தம் எப்போது ஏற்பட்டது? 1919-ல்

19. முதலாம் உலகப் போரிற்கான காரணிகள் எவை?
1. ஜேர்மனியின் ஏகாதிபத்தியக் கொள்கை,
2. பிரான்சிற்கும் ஜேர்மனிக்குமிடையிலான பகைமை,
3. ஐரோப்பா இராணுவ அணிகளாகப் பிரிந்தமை,
4. பால்கான் பிரதேசங்களின் சீர்குலைவு,
5. ஆஸ்திரிய இளவரசன் பேடினந்து படுகொலை செய்யப்பட்டமை.

20. முதலாம் உலக யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?
1. உயிர்களும் உடமைகளும் அழிந்தன
2. புதியநாடுகள் தோற்றம் பெற்றன
3. நோய்கள் பரவின
4. நாடுகளின் கடன் தொகை அதிகரித்தது.
5. சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது.

21. இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலம் எது? 1939—1945

22. இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்ட அச்சு நாடுகள் எவை? நேச நாடுகள் எவை? அச்சுநாடுகள் :- ஜேர்மனி, இத்தாலி, யப்பான்.
நேசநாடுகள் :- பிரித்தானியா, பிரான்ஸ் சீனா ஐக்கிய அமெரிக்கா

23. இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் என்ன?
1. ஜனநாயகத்திற்கு வெற்றிகிடைத்து சர்வாதிகாரம் முடிவிற்குவந்தது
2. உயிர் சேதமும், பொருட் சேதமும்,
3. ஜேர்மனி பிளவுபட்டது
4. பொதுவுடமை கொள்கை பரவியது.
5. ஐக்கிய நாடுகள் தாபனம் தோன்றியது

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்



Pam 1325

# Princess CAROLINE



SINAR DUNIA

இந் நூலாசிரியரின்

# ஏனைய வெளியீடுகள்

1. **வரலாறும் சமூகக் கல்வியும் ஆண்டு 10**

   துரித மீட்டலுக்கான வினா விடை — விலை 32.00

2. **சைவ நெறி ஆண்டு 10-11**

   துரித மீட்டலுக்கான வினா விடை — விலை 30-00

3. **சமூகக் கல்வி ஆண்டு 9** — 2ம் பதிப்பு

   துரித மீட்டலுக்கான வினா விடை — அச்சில்

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

விபரங்கட்கு

வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்

இராஜா பிறஸ், கண்டி றோட், சாவகச்சேரி.